Registered as a Newspaper    பக்கங்கள் 08    விலை ரூபா 5.00

நல்லூர் ... மாநகர ... யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM    மக்கள் தினசரி    Peoples Daily

நாதம் 05    திருவள்ளுவர் ஆண்டு 2025    பங்குனி 9    (22.3.94)    செவ்வாய்க்கிழமை    ஓலை 32

## அரசாங்க அறிவிப்புகள் குறித்து செயலக வட்டாரத்தில் குழப்பம்

கடல்வலய தடைச் சட்டம் தளர்வு, மீனவர்களுக்கா னநிவாரணம் நிறுத்தம், இடம் பெயர்ந்தவர்களுக்கான நிவாரண நிறுத்தம் ஆகியவை சம்பந்தமான தெளிவான விளக்கம் பெறவும் சந்தேகங் களை தீர்த்துக் கொள்ளவும் மேலதிக விபரங் களைப் பெறவும் யாழ் அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் கொழும்பிற்கான தமது பயணத்தை நேற்று ஆரம்பித்தார். பருத்தித்துறையிலிருந்து காங்கேசன்துறைக்கு கப்பல் ஒன்றில் செல்லும் அரசாங்க அதிபர் பலாலி சென்று, விமானத்தில் கொழும்பிற்கு பயணமாவார் என்று தெரிவிக்கப்பட்டது; பத்திரிகைகளில், வானொலிகளில் அரச தரப்பினரால் வெளியிடப்படும் தகவல்கள் (6 ஆம் பக்கம் பார்க்க)

## பாரிஸில் புலிகளுடன் சபாநாயகர் முகமது பேசுவார்; யாழ்ப்பாணம் வருவதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கை

(கொழும்பு)

அண்மையில் நான் மேற்கொள்ளவிருக்கும் யாழ்ப்பாண விஜயம் குறித்து பாரிஸில் விடுதலைப் புலிகளுடனும் வேறும் பலருடனும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளேன் என சிறிலங்கா பாராளுமன்றச் சபாநாயகர் முகமது தெரிவித்தார்.

உலகப் பாராளுமன்றங்களின் மாநாடொன்றில் கலந்துகொள்வதற்காக பிரான்சிற்குப் புறப்பட்டுச் செல்லும் வழியில் கட்டுநாயக்கா விமானநிலையத்தில் சபாநாயகர் இவ்வாறு தெரிவித்தார்.

சபாநாயகர் முகமதுவின் தலைமையில் சிறிலங்காவின் பாராளுமன்ற உறுப்பினர் குழுவொன்று உலக பாராளுமன்ற மாநாட்டில் கலந்துகொள்வதற்காக பாரிஸ் சென்றுள்ளது. இக்குழுவில் ஐந்து பாராளுமன்ற உறுப்பினர் இடம்பெறுகின்றனர்.

இப்பயணத்தின் போதே சபாநாயகர் முகமது பாரிஸில் பேச்சுக்களை நடத்தவுள்ளார். இப்பேச்சுக்கள் சபாநாயகரின் யாழ்ப்பாண விஜயத்திற்கான முன்னேற்பாட்டு முயற்சிகள் என அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது.

சபாநாயகர் முகமது ஏப்ரல் மாதம் முதலாம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளதும் இனப்பிரச்சினை குறித்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதும் தெரிந்ததே.

# தட்டுவன் கொட்டியில் திடீர் தாக்கு; 11 காவலரண்கள் புலிகளிடம் வீழ்ச்சி!

## மூன்று சிப்பாய்கள் பலி; பலர் படுகாயம்

(ஆனையிறவு)

ஆனையிறவு - தட்டுவன்கொட்டி பகுதியில் உள்ள சிறிலங்கா இராணுவத்தினரின் தொடர் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை திடீர் தாக்குதல் ஒன்றை நடத்தினர். சுமார் முப்பது நிமிடங்கள் நீடித்த இம்மோதலின் போது பதினொரு காவலரண்கள் புலிகளிடம் வீழ்ச்சி கண்டன. மூன்றிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர், பலர் காயமடைந்தனர். இறந்த இராணுவத்தினரின் மூன்று சடலங்களும், பல ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

விடுதலைப் புலிகளுடன் இணைந்து துணைப் படைவீரர்களும் பங்குபற்றிய

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## செயலகத்தில் கலந்துரையாடல்

ஒருதொகுதி அத்தியாவசிய பொருள்களுடன் ''வாதுவ'' என்ற கப்பல் இன்று பருத்தித் (6ஆம் பக்கம் பார்க்க)

## போலிவாக்குச்சீட்டுஏற்றிவாகனங்கள் தென்பகுதி நோக்கி வருகின்றன

### சிறிமாவோ குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாளை மறுதினம் நடைபெறவுள்ள தென்மாகாண சபைத் தேர்தலின் போது வாக்களிப்பில் மோசடிகளை செய்யும் பொருட்டு ஒரு தொகுதிவாக்குச்சீட்டுக்களை ஏற்றிக்கொண்டு வாகனங்

விடுத்தார். கொழும்பு மாளிகாவத்தை பகுதியில் இருந்து வீடமைப்பு அமைச்சுக்கு சொந்தமான வாகனங்களிலும் வேறு சில வாகனங்களிலும் இந்த வாக்குச் சீட்டுகள்

ஆயுதங்களும் இவ் வாகனங்களில் ஏற்றப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தேர்தலின்போது நீல நிற உடை நீலத் தொப்பி என்பவற்றை அணிந்து குழப்ப

பற்றப்பட்டன.

**விடுதலைப் புலிகளுடன் இணைந்து துணைப் படைவீரர்களும் பங்குபற்றிய இம்மோதலில், மூன்று புலிகள் வீரச்சாவடைந்தனர்.**

நேற்று அதிகாலை நான்கு மணியளவில் ஆனையிறவு தட்டுவன் கொட்டி பகுதியில் அமைந்திருந்த சிறிலங்கா இராணுவ தொடர் காவலரண்கள் மீதே தமிழீழ விடுதலைப்புலிகள் துணிகர அதிரடித்தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர்.

சுமார் முப்பது நிமிடங்கள் வரை நடாத்தப்பட்ட இத்தாக்குதலின் போது பதினொரு தொடர் காவலரண்கள் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டு முற்றாகத் தாக்கி அழிக்கப்பட்டன. மூன்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர்; ஏனையோர் முகாம்களுக்குத் தப்பி ஓடிவிட்டதாகவும் தெரியவந்துள்ளது.

இத்தாக்குதலை தொடர்ந்து மூன்று இராணுவத்தினரது உடல்களும் ஆயுதங்களும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இதேவேளை ஆனையிறவு

(6ஆம் பக்கம் பார்க்க)

# ஆனையிறவு-கிளிநொச்சிப் பகுதியில் அகோர விமானக் குண்டு வீச்சு

(கிளிநொச்சி)

சிறிலங்கா விமானப் படை விமானங்கள் நேற்றுக் காலை ஆனையிறவு கிளிநொச்சிப் பகுதிகள் மீது மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதல்களால் சில பொது மக்கள் படுகாயமடைந்ததுடன் பெருமளவு சொத்துக்களும் நாசமாக்கப்பட்டன.

நேற்று அதிகாலை ஆனையிறவு தட்டுவன் கொட்டி இராணுவ காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலைத் தொடர்ந்து அப் பகுதிக்கு வந்த சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான இரண்டு சியாமா செட்டி ரக குண்டுவீச்சு விமானங்கள் இரு உலங்கு வானூர்திகள் மற்றும் புக்காரா விமானம் ஒன்றும் இணைந்து அப் பகுதி மக்கள் குடியிருப்புகள் மீது அகோர குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டன. இதன்போது ஆனையிறவு பிரதான முகாமிலிருந்து ஆட்டிலறி எறிகணைத் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன. இத் தாக்குதல்களின் போதே சில பொது மக்கள் படுகாயமடைய நேர்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(ஆனையிறவு)

ஆனையிறவு தட்டுவன்கொட்டி தொடர் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதுடன் பல ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

- ஃ ரி56 - 2ரக துப்பாக்கி — 02
- ஃ மகசின் — 06
- ஃ ஜி3 ஏ3 ரக துப்பாக்கி — 01
- ஃ மகசின் — 06
- ஃ ஏ. கே. கோல்சர் — 01
- ஃ ஏ. கே. எல். எம். ஜி. மகசின் — 03
- ஃ ஏ.கே. எல். எம். ஜி. லிங்குடன் ரவைகள் — 200
- ஃ நடுத்தர ரவைகள் — 633
- ஃ நேற்றோ ரவைகள் — 240
- ஃ ஜே. ஆர். ரக கைக்குண்டு — 02
- ஃ ஏ கே எல் எம் ஜி கோல்சர் — 05
- ஃ தண்ணீர்க் கான் — 01
- ஃ ஹெல்மெற் — 02
- ஃ இராணுவ பட்டி — 04
- ஃ கிறபாக் — 01
- ஃ தண்ணீர்க்கான் கோல்சர் — 10

# மூன்று புலிகள் வீரச்சாவு

ஆனையிறவு தட்டுவன் கொட்டி சிறிலங்கா இராணுவ காவலரண்கள் மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலின்போது மூன்று போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

கப்டன் அன்பன் (சிறிதரன் சாந்தகுமார் தர்மபுரம் கிளிநொச்சி)

லெப்டினன்ட் கம்பன் (இரத்தினம் யோகேஸ்வரன் இரணை இலுப்பைக் குளம் கல்மடு வவுனியா)

லெப்டினன்ட் ஜெயக்குமார் (பொன்னுத்துரை இதயகுமார் புளுமச்சினாதிக் குளம் மாங்குளம்)

ஆகியோரே வீரச்சாவடைந்தவர்கள் ஆவர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

தொகுதிவாக்குச்சீட்டுக்களை ஏற்றிக்கொண்டு வாகனங்கள் சில தற்போது தென் மாகாணம் நோக்கி வந்து கொண்டிருப்பதாக சுதந்திரக் கட்சியின் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா குற்றஞ்சாட்டியுள்ளார்.

மாத்தறையிலிருந்து வெரித்தாஸ் வானொலிக்கு அவர் அளித்த தகவலில் மேற்படி மோசடிக்காக வாக்குச் சீட்டுகளை ஏற்றிக்கொண்டு வரும் வாகனங்களின் இலக்கங்களை தெரிவிக்க தாம் தயாராக இருப்பதாகவும் சவாலும் வேறு சில வாகனங்களிலும் இந்த வாக்குச் சீட்டுகள் எடுத்துவரப்படுகின்றன. எம்பிலிப்பிட்டியிலிருந்தும் ஒரு வாகன அணி இவ்வாறு மோசடி வாக்குச் சீட்டுகளை ஏற்றிக்கொண்டு புறப்பட்டுள்ளது.

இதைவிட தேர்தலின் போது ஐ. தே. கவினர் வன்முறையில் ஈடுபடும் பொருட்டு வாக்குப் பெட்டிகளுடன் உடை நீலத் தொப்பி என்பவற்றை அணிந்து குழப்ப நடவடிக்கையில் ஈடுபட்டு பழியை எமது கட்சி மீது போடவும் ஐ.தே.கட்சி திட்டமிட்டுள்ளது. இத்தகைய குழப்ப நடவடிக்கையை கட்டவிழ்த்து அதன் பின்னர் எமது கட்சி முக்கியஸ்தர்களை கைது செய்து அதன்

(6ஆம் பக்கம் பார்க்க)

# பீரங்கித் தாக்குதலுக்கு குருநகர் இளைஞன் பலி

(குருநகர்)

நேற்று முன்தினம் முன்னிரவு 7.15 மணியளவில் குடாக் கடலில் நுழைந்த சிறிலங்கா கடற்படையின் ஐந்துக்கும் மேற்பட்ட பீரங்கிப் படகுகள் நடாத்திய தாக்குதலில் தலையில் காயமடைந்த நிலையில் கடலில் குதித்த குருநகரைச் சேர்ந்த தங்கராசா ரமேஷ் (வயது 20) என்பவர் பலியாகி இருக்கலாமெனத் தெரிவிக்கப்படுகிறது.

அவருடன் ஒரே வள்ளத்தில் சென்ற இம்மனுவல் சகாயராசா காயங்களுடன் தப்பிவந்து யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவது தெரிந்ததே.

குருநகரைச் சேர்ந்த மற்றொருவர் மேற்படி தாக்குதலுக்குக் கடலில் குதித்தவர்

(6ஆம் பக்கம் பார்க்க)

# கட்சிப் பிரதிநிதிகளை அழைத்துச் செல்ல ஏற்பாடு

(கொழும்பு)

தென் மாகாண சபை தேர்தல் வாக்களிப்பின் பின்னர் வாக்குகள் கணக்கெடுக்கப்படும் நிலையத்திற்கு வாக்குப் பெட்டிகள் எடுத்துச் செல்லப்படும் போது சம்பந்தப்பட்ட கட்சிகளின் பிரதிநிதிகளை அங்கு அழைத்துச் செல்வதற்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இத் தகவலை பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். தேர்தல் ஆணையாளரின் விசேட உத்தரவின்படி இந்த

(6ஆம் பக்கம் பார்க்க)

# லலித் கொலை பாணியில் சந்திரிகாவை கொல்ல முயற்சி

## மகிந்த ராஜபக்ச குற்றச்சாட்டு

(கொழும்பு)

லலித் அத்துலத் முதலியை கொலை செய்த பாணியில் மேல் மாகாண சபை முதலமைச்சர் சந்திரிகா விஜயகுமாரணதுங்காவை கொலை செய்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்று அம்பாந்தோட்டை எம். பி. மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை பொலிஸ்மா அதிபரைச் சந்தித்த போது அவரிடம் இது பற்றி தெரிவித்துள்ளார்.

கடந்த 18ஆம் திகதி வெலியத்த பகுதியில் நடைபெற்ற பொதுஜன ஐக்கிய முன்னணியின் கூட்டத்தில் சந்திரிகா கலந்து கொள்ள விருந்ததாகவும், குறிப்பாக மாலை 4.00 மணிக்கும் 7.00 மணிக்குமிடையில் அவர் கலந்து கொள்ள விருந்ததாகவும் அவ்வேளை கூட்டம் இடம்பெற்ற மேடைக்கு வழங்கப்பட்ட மின்சாரம் வெலியத்த பொலிஸ் அதிகாரியின் வேண்டுகோளுக்கிணங்க துண்டிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இக் கூட்டத்திற்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்டது என்றும் தமக்குகிடைத்த தகவல்களின்படி கூட்டம் நடைபெறும் இடத்திற்கு அருகே உள்ள தொடர்மாடிப் பகுதியில் துப்பாக்கிஏந்திய நபர்கள் காணப்பட்டதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இது தொடர்பாக விரிவான விசாரணை ஒன்று உடன் ஆரம்பிக்க வேண்டும் எனவும் அவர் பொலிஸ்மா அதிபரைக் கேட்டுள்ளார்.

சப்பிரகமுவ மாகாணசபை

# சுகாதார அமைச்சருக்கு அம்பாந்தோட்டையில் சூடு

(கொழும்பு)

அம்பாந்தோட்டை மாவட்டம் சூரியவெவ பகுதியில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவமொன்றின் போது சப்பிரகமுவ மாகாண சபையின் சுகாதார அமைச்சர் நிமல் பியரத்னா துப்பாக்கியால் சுட்டுக் காயப்படுத்தப்பட்டுள்ளார்.

இப் பகுதியிலிருந்து பொதுசன மக்கள் முன்னணி அலுவலகத்திற்கு அருகே பியரத்னா வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது இச்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


**பசன் கன்றுகள் விற்பனைக்கு**

ரூபா 10/- மட்டுமே; சோற் பலவு கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. TASTE LINE INDUSTRIES (PVT) LTD; No- 14- Seenier Lane, Jaffna- (சி-8816)

**இறைச்சிக் கோழி**

இறைச்சிக் கோழிகள் எந்நேரமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளவும். சுவையருவி கோழிப்பண்ணை, மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-8799)

**பாலர் ஆசிரியர் பயிற்சி**

1994-04-02 ஆரம்பம். ஜி. சீ. ஈ. (OIL) கடைசித் தகைமை - சனி, ஞாயிறு வர முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (7810)

**இனிக் கோழிக்குஞ்சு விற்பனைக்கு**

இரண்டு மாதம் நிரம்பிய இனிக் கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. கந்தசாமி அன் சன்ஸ், 15, ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு. (7811)

**தவறிவிட்டது**

20-3-1994 அன்று திருநெல்வேலிச் சந்தைக்கும் உரும்பராய் சந்திக்கும் இடையில் திருமதி மகேஸ்வரி தவமணி என்பவருடைய அடையாள அட்டையும் (417930102v) முக்கிய ஆவணங்களும் பேர்சுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தவமணி தேவி கந்தசாமி கோவிலடி உரும்பராய் மேற்கு, உரும்பராய் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (7816)

**காணி விற்பனைக்கு**

கோப்பாய் தெற்கு இராச வீதி வெலிங்டன் தோட்டத்துக்கு அருகில் 6 பரப்புக் காணி பிரதான வீதியில் விற்பனைக்குண்டு. தொடர்பு: மா. வைகுந்தவாசன் பழைய வீதி, கோப்பாய் தெற்கு கோப்பாய். (7817)

**தவறிவிட்டது**

21-03-94 நேற்று அரியாலைக்கும் திருநெல்வேலி சந்திக்கும் இடையில் பேர்ஸ் ஒன்று தொலைந்து விட்டது. அதற்குள் பல்கலைக் கழக விரிவுரையாளர் அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை, பேராதனை அடை...


# சந்தர்ப்பவாதிகளை உதைக்க ஐ. ஐ. தே. முன்னணி பின்நிற்காது

**- திருமதி சிறிமானி அத்துலத்முதலி**

(கொழும்பு)

தனிப்பட்ட தேவைகளுக்காக எவர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்தாலும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஒருபோதும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து விடாது. இந்த உறுதியை மறைந்த லலித் அத்துலத்முதலி எடுத்திருந்தார். அதனை நாம் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வோம். இவ்வாறு திருமதி சிறிமானி அத்துலத் முதலி தெரிவித்தார்.

வீரகெட்டிய கொந்தளவுவையில் நடைபெற்ற பொதுசன ஐக்கிய முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், லலித் அத்துலத்முதலி ஜனநாயகத்தைப் பாதுகாக்கவே, ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேறினார். ஜனநாயகத்துக்காகவே அவர் தனது உயிரையும் தியாகம் செய்தார். எனவே உண்மையான ஜனநாயகத்தை நாட்டில் நிலை நாட்டுவதற்காக ஐ. தே. கட்சியை இந்த மாகாணசபைத் தேர்தலில் படுதோல்வி அடையச் செய்து பொதுசன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு வழங்கல் வேண்டும். இந்த நாட்டு மக்களுக்காக பயமின்றி தனது கொள்கைகளை அத்துலத் முதலி முன்னெடுத்து சென்றதால்தான் அவர் கொலை செய்யப்பட்டார். அந்தப் பயங்கர அரசியலை நாட்டிலிருந்து ஒழித்தும் கட்டுவதற்காக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி பின்நிற்காது. சந்தர்ப்பவாதிகளை இனம் கண்டு அவர்களை உதைத்துத் தள்ளவும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி பின்நிற்காது எனவும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் நந்தி மித்ர ஏக்கநாயக்கா, பொதுசன ஐக்கிய முன்னணி வேட்பாளர் திருமதி நிருபமா ராஜபக்ஷ உட்படப் பலரும் உரை நிகழ்த்தினர்.

## சுகாதார தரிசிப்பாளருக்கு பயிற்சி வகுப்பாம்

(யாழ்ப்பாணம்)

சுகாதார தரிசிப்பாளர்களுக்கான 4 நாள் தொடக்கம் 6 நாட்களுக்கான பயிற்சி ஒன்று யாழ். தாதிகள் பயிற்சிக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடன் யாழ். பிராந்திய பயிற்சி பணிப்பாளர் சிறிகாந்தா தலைமையில் நடைபெறவுள்ளது.

கிராமிய சுகாதார பயிற்சியாளர்களுக்கு நோய்கள் சேவைக்கான முன்பயிற்சி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## மலேரியா தடுப்புவார நடவடிக்கைகள் ஆரம்பம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் மலேரியா தடுப்பு வாரத்தை மிகச் சிறப்பாக நடாத்தி மக்களை மலேரியா நோயிலிருந்து பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. ஆ. சிவசுவாமி மேற்கொண்டுள்ளார். இதற்கிணங்க கிராமங்கள் தோறும் சுகாதாரக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இச்சுகாதாரக்குழுக்களில் சுகாதாரப் பகுதியினருடன் கிராமிய சமூக சேவை நிறுவனங்களின் உறுப்பினர்கள், கிராமசேவை அலுவலர்கள், நலன் விரும்பிகள் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். இச் சுகாதாரக் குழுக்கள் மலேரியா தடுப்பு சம்பந்தமான கருத்தரங்குகள் நடாத்தல், பாடசாலைகளில் மலேரியா தடுப்பு பற்றிய போட்டிகளை நடாத்தல், மலேரியா தடுப்பு பற்றிய சுவரொட்டிகளை ஒட்டுதல், சிரமதான முயற்சிகளை மேற்கொள்ளுதல், மலேரியா தடுப்பு பற்றிய கலை நிகழ்ச்சிகளை நடாத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. மலேரியா தடுப்பு வார நடவடிக்கைகளை பிரதேச செயலர் திரு. சிவசுவாமி கண்காணித்து வருகிறார். (25)

## நெற்செய்கைமீதான தடை உத்தரவு நீடிப்பு

(மட்டக்களப்பு)

ஏறாவூர்ப் பற்று பிரதேச செயலகப் பிரிவில் இருக்கும் சந்தன ஆற்றுப் பிரதேசத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுவதற்கு படையினர் விதித்த தடை உத்தரவு தொடர்ந்தும் நீடிக்கின்றது. இதனால் 1500க்கும் அதிகமான குடும்பங்கள் வருமானமோ, தொழிலோ இன்றிப் பாதிக்கப்பட்டுள்ளன. பண்ணப்படுவதை 1990-ம் ஆண்டு முதல் படையினர் தடுத்து வருவது தெரிந்ததே. எதிர்வரும் சிறுபோக செய்கைக்கும் இத் தடை உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது

### கல்வாரிக் கலம்பகம் மேடையேற்றம்

யாழ். திருமறைக் கலாமன்...

## இன்றைய நிகழ்வுகள்

(கொழும்புத்துறை)

யாழ். கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் வித்தியாலய அதிபர் திருமதி பரிமளம் அன்னலிங்கம் தலைமையில் நடைபெறும். (24)

ஃ ஃ ஃ

யாழ்ப்பாண பல்கலைக் கழகதுணைவேந்தர் அ. துரைராஜா அவர்களின் சேவை நலனைப்பாராட்டிபல்கலைக் கழக ஊழியர் சங்கம் நடாத்தும் பிரிவுபசாரவிழா இன்று மாலை மூன்று மணியளவில் பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ளது. மங்கள வாத்திய இசையுடன் ஊர்வலமாக துணைவேந்தர் அழைத்து வரப்பட்டு பாராட்டுக் கூட்டம் நடத்தப்பட இருப்பதுடன். தொடர்ந்து கௌரவிப்புக்கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற இருக்கின்றது.


யாழ்மாவட்ட உலர்வலய அபிவிருத்தி மன்றம்

## பதவி வெற்றிடம்

### வெளிக்கள உத்தியோகத்தர்

யாழ் மாவட்ட உலர்வலய அபிவிருத்தி மன்றத்தின் சேமிப்புக் கழகத்தில் 1992-03-31ந் திகதிக்கு முன்னர் அங்கத்தவர்களாகவுள்ள தகுதியானவர்களிடமிருந்து மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமை:** க. பொ. த (உயர்தர) பரீட்சையில் கணக்கியல் உட்பட ஆகக் குறைந்தது மூன்று வர்த்தகப் பாடங்களில் ஒரே தடவையில் சித்தி பெற்று இருத்தல் வேண்டும்.

**வயது:** 25 - 35 வரை

மேற்குறிப்பிட்ட தகைமைகள் உள்ளவர்கள் 1994-04-10-ம் திகதிக்கு முன்னர் நிர்வாகச் செயலாளர் உலர்வலய அபிவிருத்தி மன்றம், 257/2, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

நிர்வாகச் செயலாளர்.

உலர்வலய அபிவிருத்தி மன்றம்,
யாழ்ப்பாணம்.

(7820)



யா-நாயன்மார்கட்டு
மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்
மகளிர் அபிவிருத்தி நிதிக்கான

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

1ம் பரிசு இல 1247
2ம் பரிசு இல 4792
3ம் பரிசு இல 0292
ஆறுதல் பரிசு இல 1132, 1657, 3371, 6281, 1820

பரிசுகள் வழங்கப்படும் திகதி பின்னர் ஈழநாதம் பத்திரிகையில் அறிவிக்கப்படும்

(சி 8877)


## நினைவு கூருகின்றோம்...

### 1994-03-22

1985-ம் ஆண்டு இதே தினத்தில் மட்டு-அமிர்தகழிப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப் படையினர் மேற்கொண்ட முற்றுகையின்போது வீரச்சாவெய்திய,

**சிந்து** (தம்பிராசா லோசநாதன் - ஏறாவூர், மட்டு)

**மரணி** (சிவரத்னம் டேவிற் அற்புதராஜன் - அமிர்தகழி, மட்டு)

மட்டு - கல்லாறுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட திடீர்த் தாக்குதலின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**சீலன்** (ஆறுமுகம் வேதாரணியம் - முகத்தான்குளம் செட்டிகுளம், வவுனியா)

வவுனியா - செட்டிகுளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**சஞ்சீவி** (தங்கராசா நடராசா - கங்கன்குளம், செட்டிகுளம், வவுனியா)

1987-ம் ஆண்டு கிளி - ஸ்கந்தபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**வினோதன்** (ஆறுமுகம் வீரசிங்கம் - வன்னேரிக்குளம், கிளிநொச்சி)

**வசந்தன்** (இராஜமலா யோகராசா - இல. 49, கோணாவில், கிளிநொச்சி

**லெப் சஞ்சீவி / மீசை** (செல்லப்பா சங்கரன் - 8-ம் கட்டை, தெல்லிப்பழை, யாழ்.)

வசாவிளானில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**றெஜின்** (கந்தையா நாகரத்தினம்- கீரிமலைவீதி,

**ராவ்** (தோமஸ் பத்திநாதன்-கதிபிட்டி-புத்தளம்)

**லெப். சங்கர்** (ரவிசங்கர்-குமுழமுனை-மணலாறு)

**கப்டன் பாஸ்கர்** (செபமாலை ரவீந்திரன்-பள்ளங்கோட்டை, நானாட்டான்-மன்னார்)

**லெப். சுகந்தன்** (இம்மானுவல் பீற்றர் அழகுராஜா யோகேந்திரன்-நறுவிலிகுளம்-மன்னார்)

**லெப். சுரேந்தர்** (பொன்னுப்பிள்ளை பாலதாஸ்-பரிகாரிகண்டல், முருங்கன்-மன்னார்)

**2-ம் லெப். பஸ்ரி** (பிரான்சிஸ் ஜெகதாஸன்-வங்காலை-மன்னார்)

**ராஜு** (செல்லத்துரை குமாரசாமி-சிவநாதன்-மன்னார்)

அதற்குள் பல்கலைக் கழக விரிவுரையாளர் அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை, பேராதனை அடையாள அட்டைகள் உண்டு. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (7821)

## மெய்வல்லுநர் போட்டி முடிவு

(யாழ்ப்பாணம்)

சென்றவெள்ளிக்கிழமை நடைபெற்ற சுரம்பன் சண்முகநாதன் மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் மகாதேவா (பச்சை) இல்லம் 1-ம் இடத்தைப் பெற்றுக் கொண்டது விவேகானந்தா (சிவப்பு) இல்லம் 2-ம் இடத்தையும், சர்வானந்தா (நீலம்) இல்லம் 3-ம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

## இலவச தையல்பயிற்சி

(தொல்புரம்)

தேசிய சர்வோதய சிரமதான இயக்கத்தின் சித்தன்கேணி பிரதேச நிலையத்தில் இலவச தையல் பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

மகளிருக்கான சுயவேலை வாய்ப்பு வசதியை மேம்படுத்த ஏற்படுத்தப்பட்டுள்ள மேற்படி இலவச சேவைத் திட்டத்திலும், பல்தொழில் சார்பு பயிற்சித் திட்டத்திலும், சுழிபுரம், சித்தன்கேணி, தொல்புரம் மற்றும் பல இடங்களைச் சேர்ந்த சுமார் 75க்கும் மேற்பட்ட வறிய குடும்பங்களைச் சார்ந்த மகளிர் பயிற்சி பெற்று வருகின்றனர். தையல் கலையுடன், கை அழகு அலங்கரிப்பு, கேக் ஐசிங் செய்தல் போன்ற பல்வேறு இலவச பயிற்சிகளும் நவீன முறையில் வழங்கப்படுகின்றன. இப் பயன்மிகு சேவையினால் பல வறிய மகளிர் தொழில் வாய்ப்பினைப் பெறவும், சுய தொழிலில் ஈடுபடவும் வாய்ப்பு எட்டியுள்ளதென சங்கானை பிரதேச இணைப்பாளர் செல்வி இ. யோகேஸ்வரி தெரிவித்துள்ளார். (41)

...டர்ந்தும் நீடிக்கின்றது. இதனால் 1500க்கும் அதிகமான குடும்பங்கள் வருமானமோ, தொழிலோ இன்றிப் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆற்றுப் பகுதியை அடுத்துள்ள சுமார் பதினையாயிரம் ஏக்கர் வரையிலான நெல் வயல்களில் செய்கை

## நெருப்புகாய்ச்சல் சிறுவன் மரணம்

(பருத்தித்துறை)

நெருப்புக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த சிறுவன் ஒருவன் மரணமானார். புலோலி தெற்கு முருகையன் கோவிலடியைச் சேர்ந்த சி. ரதீஸ்குமார் (வயது 13) என்பவரே நெருப்புக்காய்ச்சலினால்மரணமானவராவார், பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையிலிருந்து அம்புலன்ஸ் வண்டியில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது வழியில் மரணமானார் என்று தெரிவிக்கப்பட்டது. (25)

## இலவச வகுப்புகள்

(கொழும்புத்துறை)

விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பினால் நடாத்தப்படும் கொழும்புத்துறை கல்வி வளர்ச்சிக் கழகத்தின் இலவச வகுப்புக்கள் கொழும்புத்துறை இந்துமகா வித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

திங்கள், புதன், வெள்ளி நாட்களில் பிற்பகல் 3-15மணி தொடங்கி நடைபெறும் வகுப்புக்களில் ஆண்டு 6 முதல் 11 வரையிலான மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இவ் வகுப்புக்களை நெறிப்படுத்தும் பொறுப்பாளர்களாக இளைப்பாறிய அதிபர் திரு. கா. கணேசதாசன், ஆசிரியை திருமதி தை. சிவலிங்கம் ஆகியோர் சேவை புரிகின்றனர். (24)

## கல்வாரிக் கலம்பகம் மேடையேற்றம்

யாழ். திருமறைக் கலாமன்றம் வழமை போன்று தவக்காலத்தை முன்னிட்டு இயேசுக்கிறிஸ்துவின் திருப்பாடுகளைச் சித்திரிக்கும் பக்தி, இசை, உரை நாடகமான ''கல்வாரிக்கலம் பகம்'' என்னும் பிரமாண்டமான தயாரிப்பை மேடையேற்ற இருக்கிறது.

இம்மாதம் 25ஆம் 26ஆம் 27ஆம் திகதிகளில் மாலை 6-45 மணிக்கு இக்காட்சிகள் ஆரம்பமாகுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

சிற்றிலக்கிய வகையிலுள்ள கலம்பகம் என்னும் பழந்தமிழ் இலக்கிய அடியொற்றிய கல்வாரிக்கதையை மன்ற இயக்குநர் பேராசிரியர் வண. நீ.மரிய சேவியர் அடிகள் நாடகப் பிரதியை உருவாக்கம் செய்துள்ளார்.

பெரும் பொருட்செலவில் 150 அடி அகலமேடையில் காட்சிகள் தொடரும் கலைநயத்தை வழமைபோல் திருமறைக் கலாமன்ற பிரமாண்டத் தயாரிப்புகளை நுகர்ந்த அனுபவ முத்திரையுடன் பார்வையாளர்கள் எதிர்பார்க்கலாமெனத் தெரிவிக்கப்படுகிறது. (21

## இலவச வகுப்புகள்

சுழிபுரம் மேற்கு கலைமகள் சனசமூக நிலையத்தினால் பகல்நேர இலவச கல்வி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேற்படி சனசமூக நிலைய கல்வி கற்போர் குழாம் ஏற்படுத்தியுள்ள இவ் இலவச கல்வி வகுப்புக்களின் ஆரம்பக்கட்டத்தில் 6ஆம் ஆண்டில் கல்வி பயிலும் பாடசாலை மாணவர்க்கு தற்போதைய கல்விப்பாண்டிற்கான பாடவிதான அடிப்படையில் சிறந்த முறையில் கற்பிக்கப்படுகிறது. இத் திட்டத்தினால் பல வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவ மாணவியர் பயனடைந்து வருகின்றனர். ஏககாலத்தில் மேலும் வகுப்புகள் விஸ்தரிக்கப்படவுள்ளன. (41)

லெப் சஞ்சீவ் / மனோ (... தரன் - 8-ம் கட்டை, தெல்லிப்பழை, யாழ்)

வசாவிளானில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**றொபின்** (கந்தையா நாகரத்தினம்- கீரிமலைவீதி, பண்டத்தரிப்பு, யாழ்.)

1988-ம் ஆண்டு உடையார்கட்டுப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட முற்றுகையின்போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**லெப் துர்க்கா** (கமலாதேவி சச்சிதானந்தன் - புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு)

**லெப். முஸ்தபா | சந்திரன்** (சிங்கராயர் மரியதாஸ் - கோயில்குடியிருப்பு, சாவகச்சேரி)

கொறவப் பொத்தானையில் இந்தியப்படையினரால் பேருந்திலிருந்து இறக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட 17 தமிழர்கள்.

முள்ளைத்தீவு-தண்டுவான்பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 06 தமிழர்கள்.

பம்பைமடுவில் இந்தியப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1989-ம் ஆண்டு வட்டமடுப் பகுதியில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**கப்டன் சத்தியன்** (ஞானமுத்து சிவானந்தராசா- தாண்டியடி, திருக்கோயில், அம்பாறை)

மட்டு - வாழைச்சேனைப் பகுதியில் இந்தியப் படையினர் மற்றும் தேசவிரோத சக்திகள் துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். மேகன்** (சீனித்தம்பி தயானந்தன் -கல்குடா, வாழைச்சேனை-மட்டு)

மணலாறு - அளம்பில் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் நைலன்** (கதிரவேல் முத்துராசா-இத்திகண்டல், அடம்பன் - மன்னார்)

மணலாறு - நாயாற்றுப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். கிர்மனி** (ஏகாம்பரம் உதயகுமார் -129, கொழும்புத்துறை வீதி - யாழ்)

1990-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் மூளைக்காய்ச்சல் நோயின் காரணமாக எமைப்பிரிந்த,

**திசைவீரன் | மந்திரி** (அருளய்யா-அருணேஸ்வரன் அல்வின் வீதி, காரைநகர்-யாழ்)

1991-ம் ஆண்டு மன்னார் - சிலாவத்துறைப் பகுதியில் சிறிலங்காப் படைமுகாம் தகர்ப்பின் நான்காம் நாள் நடைபெற்ற சமரில் வீரச்சாவெய்திய

**பாலசுந்தரம்** (முத்துப்பிள்ளை சிவலிங்கம் - விபுலானந்தர் வீதி, வாழைச்சேனை-மட்டு)

**சந்திரகாந்** (காளியப்பு ராஜி-தம்பலகமம்-திருமலை)

**கலாதரன்** (விநாயகமூர்த்தி சிவனேஸ்-திருமலை)

**உத்தமன்** (பழனியாண்டி வேலு-தலவாக்கொல்லை)

... மன்னார்)

**2-ம் லெப்.பஸ்ரி** (பிரான்சிஸ் ஜேசுதாசன்-வங்காலை-மன்னார்)

**ராஜு** (செல்லத்துரை குமாரசாமி-சிவநாதன்-மன்னார்)

**பரமசிவம்** (கிருஷ்ணகோபால் வசந்தகுமார்-மட்டுவில் கிழக்கு-பூநகரி)

**சேகரன்** (தர்மலிங்கம் இம்மானுவேல் ஞானராஜேஸ்வரன்-முழங்காவில்-மன்னார்)

**இரத்தினம்** (அந்தோனிப்பிள்ளை மரியநாயகம்- முருங்கன்பிட்டி-மன்னார்)

**ஜெரோம்** (நடராசா சகாயராசா-சிறுநாவற்குளம்-மன்னார்)

**ஜெய்லான்** (இரத்தினசிங்கம் மொறிஸ் நிமலன்- கிளாலி)

**பீற்றர்** (தெய்வேந்திரன் தவராசா-தில்லிப்பளை-பளை)

**உசான்** (சந்தனம் தேவநாயகம் புலோப்பளை-பளை)

**லெப்.டெனிக்** (சுந்தர் குகதாசன்-மிருசுவில் வடக்கு- கொடிகாமம்)

**லெப்.பரணி** (செல்லத்துரை தவராசா-செற்பலி- மிருசுவில்)

**லெப்.றொபேட்** (குலநாதன் குலமோகன்-''உதயபதி'' அளவெட்டி தெற்கு-யாழ்)

**மதனன்** (முருகேசு கமலதாசன்-கச்சாய்-வடக்கு- கொடிகாமம்)

**சூரியகுமார்** (கனகராசா லிங்கேஸ்வரன்-புத்தூர் மேற்கு, புத்தூர்-யாழ்)

**மது** (இமானுவேல் சுரேன்-மணற்காடு-குடத்தனை)

**பப்பா** (இராசலிங்கம் பத்மலிங்கம்-மாசியப்பிட்டி, சண்டிலிப்பாய்-யாழ்)

**மணிமுடி** (பாலசிங்கம் கிரிதரன்-டச்சுவீதி, அளவெட்டி-யாழ்)

**கலைச்செல்வன்** (துரைசிங்கம் மணிவண்ணன்- சிவன்கோயிலடி வட்டுக்கோட்டை -யாழ்)

ஆனையிறவு சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**பிரதாப்** (அருணாசலம் மோகன்-குளத்தடி, நாயன்மார்கட்டு-யாழ்)

1992-ம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட ''ஒப்பரேசன்'' ஜெபரா'' நடவடிக்கையின்போது விழுப்புண் அடைந்திருந்து சிகிச்சையின்போது யாழ் மருத்துவமனையில் வீரச்சாவெய்திய,

**கப்டன் பரஞ்சோதி** (சிவபாதசுந்தரம் அனுசீலன் -5-ம் வட்டாரம், திரியாய்- திருமலை)

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(கி-8875)

நல்லூர் கிளை நூலகம்

உ

'அருள்மிகு ஸ்ரீ பார்வதி ஸமேத பரமேஸ்வரன் துணை'

# யாழ்ப்பாணப் பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா அவர்களின் பிரிவுபசார விழா சிறப்பிதழ்

## பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் வாழ்த்துகிறார்

பேராசிரியர் அ. துரைராஜா அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தைச் செவ்வனே நடத்தி, இன்னொரு பல்கலைக் கழகத்துக்கு மாற்றலாகிச் செல்கிறார். அவர் இப்பல்கலைக் கழக நிர்வாகத்தினை ஏற்றுக் கொண்ட நாள் முதலாகத் தன்னுடைய சொந்த நலன்களையெல்லாம் ஒருபக்கம் வைத்துவிட்டுப் பல்கலைக் கழகப் பணிகளுக்கே முதலிடம் கொடுத்துப் பணியாற்றி வந்துள்ளார்.

பல்கலைக் கழகத்தின் ஒரு பகுதியாக விளங்கும் கல்வி சாரா ஊழியர்களாகிய நாம் அவருக்கு மிகுந்த கடமைப்பட்டுள்ளோம். அவர் எல்லாவற்றிலும் காட்டிய நேர்மையான அணுகல்முறை எங்களிலே காட்டிய அன்பு அவர் எங்கள் மனங்களிலே நிறைந்தவராக ஆக்கின. எங்கள் நலன்களிலே அதிக ஈடுபாடு காட்டி அவர் உழைத்து வந்தார். எல்லோரையும் ஒப்ப நோக்கும் அவருடைய சீரிய பண்பு எவரையும் கவரவல்லது. நீதி தீர்ப்பது மட்டுமன்றி, நீதி தவறாது நடப்பவர் அவர், இதனால் எம் போன்ற ஊழியர்கள் அவரை மதித்தும் துதித்தும் போற்றுகிறோம். அவர் இப்பல்கலைக் கழகத்தை விட்டுச் செல்லுதல் உண்மையில் எங்களுக்கு மிகுந்த மனவேதனையைக் கொடுக்கின்றது.

பல்கலைக் கழகத்தை நிர்வகிக்க வந்த பேராசிரியர் துரைராஜா பல்கலைக்கழகத்தை அண்டியுள்ள சமுதாயத்தை என்றும் மறந்தாரில்லை. இப்பல்கலைக்கழகத்தாலே அம்மக்கள் பயன்பெற வேண்டுமென்ற ஆணித்தரமான கோட்பாட்டை உடையவர் அவர். இதனால், கல்விசாரா ஊழியர்களுடைய மனப்போக்குகளையும் நடத்தைகளையும் நன்குணர்ந்து அவற்றுக்கேற்றபடி நன்மைகள் செய்தார்.

இந்த வேளையிலே அவரைப்போல் உழைப்பவர்கள் பலர் எமக்கு வேண்டும். அவருக்குப் பிரியாவிடை சொல்வது மிகுந்த கஷ்டமான காரியம். எனினும், காலம் என்பது ஒரு நியதிக்கு உட்பட்டது. அந்த நியதிக்கேற்ப எம்முடைய மனம் களிக்கப் பணி புரிந்து தன்னுடைய வேறு பணிக்காகச் செல்லும் துணைவேந்தர் துரைராஜா அவர்களே! மீண்டும் ஒரு தடவை எங்களுக்குப் பணியாற்ற வர வேண்டும்! இது ஒரு சிறிய பிரிவு. யாழ் பல்கலைக் கழகத்துக்கும் உங்களுக்கும் இடையே பிரிவு இல்லை. உங்களுக்கு எங்கள் பல்கலைக் கழக ஊழியர் சங்கத்தின் சார்பிலே எங்கள் எல்லோருடைய அன்பினைத் தெரிவிக்கிறேன். செல்லுமிடமெல்லாம் நீங்கள் சீர்பெறுக; நல்ல வளம் பெறுக; இள நலம் பெறுக.

ச. க. தனேந்திரன்
யாழ் பல்கலைக் கழகம்.

## தொழில் நுட்பவியலாளர் ஒன்றியத் தலைவர் வாழ்த்துகிறார்

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா அவர்களின் பிரிவுபசார விழாவையொட்டி ஒரு செய்தி தருவதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

கற்க கசடற கற்றவை - கற்றபின்
நிற்க அதற்கு தக''

எனும் வள்ளுவன் வாக்குக்கு அமைய தமது வாழ்வை அமைத்த கற்ற ஒரு சிலரில் இவரும் ஒருவர் என்பது மிகையாகாது. இவர் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் பீடத்தில் பீடாதிபதியாக கடமையாற்றும் போது தனது மனித நேயத்தைப் பலவிதங்களில் காட்டி தமிழ், சிங்கள மாணவர், ஊழியர்களின் உள்ளங்களில் பதிந்தவர். குறிப்பாக தொழிலாளர் கல்வி எனும் துறையை பேராதனைப் பல்கலைக் கழகத்தில் ஆரம்பித்து தொழிலாளர்கள் பல்கலைக்கழகம் வரை கல்வி கற்று பட்டம் பெற வாய்ப்பளிக்க தன்னால் இயன்ற முயற்சி பல செய்து வெற்றி கண்டவர்.

மேலும் தன் தாய் மண்ணிற்கும் சேவை செய்ய வேண்டும் எனும் நல்நோக்கால் தனது மேலான வருமானங்களை உதறித்தள்ளி இன்றைய இக்கட்டான நிலையில் துணைவேந்தர் பதவியை ஏற்றார். ஏற்றதுடன் அமையாது அவர் காலம் யாழ். பல்கலைக்கழகத்தின் 'பொற்காலம்' எனப் பலரும் கூறுமாறு தனது கடமையை கண்ணை இமைகாப்பது போல் கருத்துடன் செயலாற்றினார். குறிப்பாக இலங்கைப் பல்கலைக் கழகங்கள் யாவும் மூடப்பட்டு இருந்த காலத்திலும், இந்திய அமைதிப்படை எனும் நாமத்தில் வந்து இந்திய இராணுவம் யாழ்ப்பாணத்தில் ஆக்கிரமிப்பு செய்து வந்த காலத்திலும் எங்கள் பல்கலைக் கழகம் இடையூறின்றி தொடர்ந்தும் இயங்கியமை இவரின் சிறந்த ஆளுமையும், புத்திக்கூர்மையும் என்பது மறுக்க முடியாததே.

இவர் தனது காலத்தில் பல துறைகளில் யாழ். பல்கலைக்கழக வளர்ச்சியில் பாடுபட்டு வெற்றி கண்டதுடன் மனித நேயத்தால் இங்கும் தொழிலாளர் கல்வியை ஆரம்பிக்க அரும்பாடுபட்டு வெற்றி கண்டார்.

இவரின் நற்சேவையை துணைவேந்தர் எனும் பதவியால் நாம் இழப்பினும் அவரது சேவை தொடர்ந்தும் எம் பல்கலைக்கழகத்திற்கு வேறு முறைகளில் கிடைக்கும் என நம்புகிறேன். இவருக்கு அத்தகைய வாய்ப்பினை எமது சமூகத்திற்கு வழங்க இறைவன் அருள் வேண்டி அவரை வாழ்த்தி வணங்குகிறோம்.

ச. தேவதாசன் B.A; Dip Hons
யாழ். பல்கலைக்கழகம்.

## எழுது வினைஞர் தொழில் நுட்ப அலுவலர் ஒன்றியத் தலைவர் வாழ்த்துகிறார்

யாழ் பல்கலைக்கழகத்திற்கு அளப்பரிய சேவைகள் புரிந்து மாற்றலாகிச் செல்லும் துணைவேந்தர் பேராசிரியர் துரைராஜா அவர்களுக்கு எமது சங்கத்தின் சார்பாக மனமார வாழ்த்துகிறோம். கல்விமான்கள் வெளியேற்றம் என்ற தற்கால சூழ்நிலையிலும் கூட, ஒரு தலை சிறந்த, உலகளாவிய பெருமையுடைய, மதிநுட்பம், செயற்திறன் கொண்ட பேராசானாகிய துணைவேந்தர் துரைராஜா அவர்கள் இப்பிரதேசத்தில் எமது மக்களுக்காக எவ்விடர்வரினும் எதிர்நீச்சல் இட்டு சேவையாற்றுவேன் என்ற திடசங்கற்பத்துடன் கடந்த ஆறு வருடங்களாக சேவையாற்றியது யாழ் பல்கலைக்கழக வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதொன்றாகும். மேலும் இப்பல்கலைக் கழகத்தில் அவர் தன்னுடைய திறமைகளை வெளிக்கொணர்ந்ததினால் தான் அவருடைய காலப்பகுதியில் எமது பல்கலைக்கழகம் ஒரு ஆலவிருட்சமாக வளர்ந்து எத்தனையோ துறைகளில் வேர் ஊன்றி நிற்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. மேலும் துணைவேந்தர் துரைராஜா அவர்களின் திறமை மிக்க சேவையினால் தான் இப் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு அதனால் ஆசிரியர்களும், மாணவர்களும் தொடர்ந்து நன்மை அடைந்து கொண்டிருக்கிறார்கள். உயர் கல்வியில் தமிழ் மாணவர்கள் இவரது சேவைக்காலத்தில் பெரிதும் நன்மை பெற்றுள்ளார்கள். இப்படிப்பட்ட செயற்திறன் உடைய பண்பாளனை, ஒரு கர்மவீரனை நாம் என்றும் எமது ஒன்றியத்தின் சார்பாக மனதார வாழ்த்துகிறோம், இவர் எங்கு சென்றாலும் நீடூழி வாழ்ந்து பெருவாழ்வு பெற்று சிறப்புற வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறோம்,

நன்றி.

சி. அருணகிரிநாதன்
யாழ் பல்கலைக்கழகம்.



## யாழ்.பல்கலைக்கழகப் பதிவாளர்வாழ்த்துகிறார்

பேராசிரியர் அ. துரைராஜா அவர்கள் 1988 புரட்டாதி மாதம் முதல் 1994 பங்குனி மாதம் வரை துணைவேந்தராக யாழ். பல்கலைக் கழகத்தில் கடமையாற்றிய பின் கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்திற்கு மாற்றலாகிச் செல்கின்றார். இதனை முன்னிட்டு யாழ் பல்கலைக் கழக ஊழியர் சங்கங்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து பேராசிரியர் அ துரைராஜா அவர்களுக்கு இன்று பிரிவுபசார வைபவம் ஒன்றை நடாத்துகின்றன- பல்கலைக்கழகம் சிறப்பாக இயங்குவதற்கு மூலகாரணமாக இருப்பவர்கள் ஆசிரியர்களும் மாணவர்களும் ஊழியர்களுமே, பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் பல்கலைக்கழகத்தின் முதுகெலும்பு என்று சொல்வது சாலச்சிறந்ததாகும் எனவே ஊழியர்கள் முன்னின்று இவ்வைபவத்தை சிறப்பாக நடத்துவதையிட்டு நான் மிக மகிழ்ச்சியடைகின்றேன்,

பேராசிரியர் துரைராஜா அவர்கள் யாழ், பல்கலைக்கழகத்திற்கு வெளிவாரிப்பட்டப்படிப்புப் பிரிவு, புற நிலைப்படிப்புக்கள் அலகு, தொழிலாளர் கற்கை நெறிப் பிரிவு ஆகியன இவரது பதவிக்காலத்தில் பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டன. மேலும் விளையாட்டுத்துறையை பல்கலைக்கழகத்தில் அபிவிருத்தி செய்ததோடு அதற்கெனத் தனியாக பணிப்பாளர் ஒருவரையும் நியமிக்க வழியேற்படுத்தினார், பட்டமளிப்பு விழா போன்று விளையாட்டு வீரர்களுக்கென 'விருதுகள் இரவு' எனும் வைபவத்தையும் தரமுயர்த்தினார். மேலும் மாணவர்களுக்கென விடுதி வசதிகளை அதிகரிக்கச் செய்தார். கிளிநொச்சியில் விவசாயபீடத்தை ஆரம்பித்த பெருமை பேராசிரியர் துரைராஜா அவர்களையே சாரும். கல்விசாரா ஊழியர்களுக்குத்தொழில்சார்ந்தசேவைக்கால வகுப்புக்களை நடாத்துவதில் ஊக்கமளித்தவர் பேராசிரியர் துரைராஜா அவர்கள்.

இந்த ஆறு வருட காலச் சேவையில் பல்கலைக்கழகச் சமூகத்தவரின்


எமது பல்கலைக்கழகம் ஒரு ஆலவிருட்-

யாழ் பல்கலைக்கழகம்.

## நெடிது சிறந்து வாழ்க

துறைசார்ந்த வல்லுநரே, துணைவேந்தே.
துரைராஜா அவர்களே,
நும் அறிவார்ந்த நெறியாலும்
அன்பார்ந்த நெகிழ்வாலும்
அனைத்து மக்கள் நிறைவாழ்வை நோக்குகிற
நிர்வாகச் செயல் வலிமை நிரம்பலாலும்
திறலாண்மை வளத்தாலும் சிந்தை கவர்ந்தீர்
- நெடிது சிறந்து வாழ்க.

இ. முருகையன்
தலைவர்-நிர்வாக உத்தியோகத்தர் சங்கம்



பேராசிரியர் துரைராஜா அவர்கள் யாழ், பல்கலைக்கழகத்திற்கு மிகச் சிறந்த சேவையாற்றியிருக்கின்றார், குறிப்பாக 1988-1994 வரை யாழ்ப்பாணத்தில் நிலவிய நெருக்கடியான காலப்பகுதிகளிலும் பல்கலைக்கழகம் சீராக இயங்குவதற்கு மூல கர்த்தாவாக விளங்கினார், ஊரடங்கு வேளைகளிலும் காலை 7,00 மணிக்கு அலுவலகத்தில் பிரசன்னமாகியிருப்பார், எந்நேரமும் மலர்ந்த முகத்துடன் பழகும் எளிய மனிதர்; இனிய பேச்சினால் அனைவரையும் கவர்ந்திழுக்கும் வல்லவர்; ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும், தனிப்பட்ட முறையிலும், உத்தியோக ரீதியிலும் எந்த உதவியையும் செய்வதற்கு அவர் தயங்கியதில்லை-

யில் பல்கலைக்கழகச் சமூகத்தவரின் மனதில் நீங்கா இடம் பிடித்துக் கொண்ட பேராசிரியர் துரைராஜா அவர்களிற்கு பல்கலைக்கழக ஊழியர் அனைவரும் ஒன்று சேர்ந்து இப்பெரு விழாவினை நடாத்துவது சாலச் சிறந்தது என்றே நான் கருதுகின்றேன்.

திறந்த பல்கலைக்கழகத்திற்கு இடமாற்றம் பெற்றுச்செல்லும் பேராசிரியர் அ. துரைராஜா அவர்களுக்கு நீண்ட ஆயுளையும் புகழையும் பார்வதி சமேத பரமேஸ்வரன் அருள வேண்டும் என்று பல்கலைக்கழக சமூகம் சார்பில் வேண்டுகின்றேன்.

க. பரமேஸ்வரன்

# துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா அவர்களின் பிரிவுபசார விழா சிறப்புற மனதார வாழ்த்துகின்றோம்.


அல்டி, 269/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

லிங்கம் சில்க் கவுஸ், 18, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

கோல்டன் செரமிக், இல: 2-D, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

மிக் கைத்தொழில் பேட்டை, திருநெல்வேலி.

மகாத்மா அச்சகம், ஏழாலை.

ராச் எரிபொருள் நிலையம், திருநெல்வேலி சந்தி, திருநெல்வேலி. உரிமையாளர்: குமார்

ஆரியபவான், கைதடிச்சந்தி, கைதடி.

ஆனந்தா புத்தக நிலையம், 21B மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

ஸ்ரீலங்கா புத்தக சாலை, இல. 234, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்

ஹரன் ரெக்ஸ் ரைல்ஸ் & பான்சி குட்ஸ், பலாலி வீதி, திருநெல்வேலி.

குறிஞ்சி மருந்தகம், இல. 3, நவீனசந்தை, பலாலி வீதி, திருநெல்வேலி.

ஸ்ரீ அம்பாள் பலசரக்குமாளிகை, பலாலி வீதி, திருநெல்வேலி சந்தி.

ஏசியன், 24, பலாலி றோட், திருநெல்வேலி.

நலன் விரும்பி

ஹோட்டல் றொலெக்ஸ், 340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஞானம்ஸ் ஹோட்டல், யாழ்ப்பாணம்.

பூபாலசிங்கம் புத்தகசாலை, 4A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

இராசையா மருந்துக்கடை, பலாலி வீதி, திருநெல்வேலி

ராஜேஸ்வரி றேட்ஸ், 205, பரமேஸ்வராசந்தி, திருநெல்வேலி.

பசன் கவுஸ், 65, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்,

சாமுவேல் & சன்ஸ், இல. 206, 208 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஸ்ரீ விக்னேஸ்வரா களஞ்சியம், 148, கண்டி வீதி, சாவகச்சேரி.

பேபி போட்டோ, பலாலி வீதி, திருநெல்வேலி.

வான்மதி நகைமாடம், 171, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

ஸ்ரீ சச்சிதானந்தா எண்டர் பிறைசஸ், கைதடி

நியூ லீலாவதி வர்த்தகக் களம், கைதடி சந்தி, கைதடி. உரிமையாளர்: தம்பிப்பிள்ளை புஸ்பராசா

சிவா அச்சகம், கைதடி

Dr K. T. S. சபாநாதன் மெடிக்கல் சென்ரர், கைதடி

(7813)

# இசைப் பிரியர்களுக்கோர் இனிய செய்தி!

## முற்றிலும் புதிய முறையில் சிறப்பாக அமைகின்றது!

W

# விக்ரர்

- இசையில் மயங்காத உள்ளங்கள் உண்டோ? அந்த இசையை இன்னிசையாக்கி உள்ளங்களை மயங்கச்செய்யும் விதத்தில் பழைய புதிய பாடல்களை ஒலிப்பதிவு செய்யவும்
- என்றும் மறக்கமுடியாத மங்களகரமான நிகழ்வுகளை அதிநவீன வீடியோ கமராக்களால் படம் பிடித்துக் கொள்வதற்கும்
- சிறந்த முறையில் வீடியோ படப்பிரதிகளை ஒளிப்பதிவு செய்வதற்கும்
- இலத்திரனியல் பொருட்களினை இலகுவாக கையாண்டு உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ளவும்

மேலும் எம்மிடம்

தனித்துவமான முறையில் ஜேர்மன் தேசத்திலிருந்து கொம்பக்ற் டிஸ்க்
(***COMPACT DISK***) மூலம் ஒலிப்பதிவு செய்யப்பட்ட

இது எங்கள் தேசம்

புலிகளின் புரட்சி இசை

ஒலிப்பதிவு நாடாக்களை ஒரே இடத்தில் நீங்கள் பெற்றிட

( ஒலி, ஒளித்துறையில் ஓர் மைல்கல்! )

# விக்ரர்

23, தேவா வீதி, யாழ்ப்பாணம்.

( மணிக்கூட்டு வீதி )

(இ-8878)

நல்லூர் ... நூலகம்
யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

தாம் கூறும் பொய்களை விழுங்க முடியாமலேயே அரசியல் கட்சிகள் இறுதியில் அழிகின்றன,

-- ஜோன் ஆர்பத்னோட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 22-03-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05

# நியாயமான தேர்தலும் சிறிலங்கா அரசும்

தென் மாகாணசபைத் தேர்தலுக்கு இன்னமும் இரண்டு தினங்கள் மட்டுமே எஞ்சியுள்ளன. இந்த நிலையில் தேர்தல்கள் சீராகவும், ஒழுங்காகவும் நடைபெறுவதற்குரிய நடவடிக்கைகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டு விட்டதாகவும், மேலதிக பொலிசார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுவதற்கென அனுப்பப்பட்டுள்ளார்கள் எனவும் தேர்தல் ஆணையாளரினதும், பொலிஸ்மா அதிபரினதும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இவை ஒரு வகையில் அவர்களின் வழமையான நடவடிக்கைகள் / அறிவிப்புக்கள் என்றே கொள்ளலாம்.

மறுபுறத்தில், இலக்கத்தகடில்லாத வாகனங்கள் பற்றியும், எதிரணியினரின் தேர்தல் காரியாலயங்கள் தாக்கப்படுவது பற்றியும், எதிர்க்கட்சி வேட்பாளர்கள், ஆதரவாளர்களுக்கு கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்படுவது பற்றியும் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டும் வருகின்றன.

இவை ஒருபுறம் இருக்க, எதிரணியினர் குறிப்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்க, பொலிசார் நியாயமான முறையில் நடந்து கொள்ள வேண்டும் என கடிதம் மூலம் அதிகாரிகளிடம் கோரிக்கை ஒன்றையும் விடுத்துள்ளார். தென் மாகாணத்தில் உள்ள பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் ''தென்மாகாணசபை தேர்தலின் போது நேர்மையாகக் கடமை புரிவதற்குத் தேவையான தைரியமும் பலமும் உங்களுக்கு இருக்கும் என நம்புகிறேன்'' எனக் குறிப்பிட்டுள்ளார். இதே போன்று அரச அதிகாரிகளும் பொலிஸாரும் தேர்தலின்போது நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும் என முன்னாள் இராணுவ அதிகாரிகள் சிலரும் பௌத்த பிக்குகளும் ஒரு கோரிக்கையை விடுத்துள்ளனர்.

அக்கோரிக்கைகளில் நியாயம் இல்லாமலும் இல்லை. ஏனெனில், சிறிலங்காவின் தேர்தல் ஜனநாயகம் எப்பவோ கேள்விக்குரிய தொன்றானதாகவும், நகைப்பிற்கிடமானதாகவும் மாறிவிட்டது. 1982 இல் இடம் பெற்ற மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தலில் தொடங்கி இறுதியில் நடைபெற்ற கிழக்கு மாகாண உள்ளூராட்சித் தேர்தல் வரை சகலவற்றிலும் தேர்தல் முறை

# இம் மண்ணிற்கு சஞ்சிகைகளின் தேவை நிறையவே உள்ளது

-புதுவை இரத்தினதுரை

(யாழ்ப்பாணம்)

இந்தத் 'தேசியம்' மாத இதழ் தொடர்ந்து வெளிவர வேண்டும். இந்த மண்ணில் இதுபோன்ற ஏடுகள் வர வேண்டிய தேவை நிறையவே உள்ளது.

இவ்வாறு, கலை, பண்பாட்டு கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை அவர்கள் தேசியம் மாத இதழ் வெளியீட்டு விழா நிகழ்வில் கலந்து கொண்டு தலைமையுரை ஆற்றும்போது தெரிவித்தார்.

நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற இவ் விழாவில் அங்கு தொடர்ந்து பேசும்போது,

ஒரு காலத்தில் இங்கு இருபதுக்கு மேற்பட்ட மாத இதழ்கள் வெளிவந்தன. இன்று ஏழு சஞ்சிகைகளுக்கு குறைவாகவே இங்கு வெளிவருகின்றன.

இன்னும் சில பத்திரிகைகள் சஞ்சிகைகள் வெளிவர இருப்பதாக தகவல் கூறுகிறது.

நிறைய சஞ்சிகைகள் இங்கு வெளிவர வேண்டிய தேவை உள்ளது. தமிழ் நாட்டில், ஆரோக்கியத்திற்கு, வேலை வாய்ப்புக்கு, சாஸ்திரத்திற்கு சமையலுக்கு என பல இதழ்கள் வெளிவருகின்றன.

இங்கும் சித்த வைத்தியம், மற்றும் அபிவிருத்திக்குமான இதழ்கள் வெளிவரவேண்டும் தேசியம் இதழில் சித்த வைத்தியம், அபிவிருத்தி ஆகிய அம்சங்கள் நிறைந்துள்ளன.

தேசியம் தொடர்ந்து வருவது எல்லோர் கைகளிலும் தங்கியுள்ளது அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றார்.

யாழ். மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் அங்கு வெளியீட்டுரை நிகழ்த்தும்போது,

பெறுமதியான அம்சங்களைக் கொண்டு இந்த இதழ் வெளிவருவது நாட்டிற்கு தேவை.

இலட்சியத்தோடு நின்றுவிடாமல் இந்த மண்ணிற்கு தேவையான விஷயங்கள் இந்த சஞ்சிகையில் வெளிவர உள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தேவையான ஒன்று.

இதுபோன்ற இதழ்கள் வெளிவர இயக்கத்தின் ஒத்துழைப்பு எப்போதும் உண்டு என குறிப்பிட்டார்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ், திருமதி கோகிலா மகேந்திரன், திரு. செம்பியன் செல்வன் ஆகியோர் மதிப்பீட்டுரை நிகழ்த்தினார்கள். தேசியம் ஆசிரியர் திருமலை யோகேந்திரம் அவர்கள் பதிலுரை ஆற்றினார். (தி-ஜா)

## நலன்புரிச்சங்கம் ஆரம்பம்

பருத்தித்துறை கோட்டக் கல்வி அலுவலக ஊழியர்களுக்கான நலன்புரிச் சங்கமொன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது. இவ் ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் போஷகராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. வே. தி. செல்வரத்தினமும், தலைவராக திரு. பி. இளையதம்பியும், செயலாளராக திரு. ஆ. இராசேந்திரமும் தெரிவுசெய்யப்பட்டனர் (25)

# அறத்தின் அடிப்படையில் தாயகம் வெல்லப்படும்

- அன்பரசன்

(பருத்தித்துறை)

''தர்மத்தின் காவலன் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே.பிரபாகரன்தலைமையிலே அறத்தின்பால் நின்று நாம் போர் தொடுத்துக்கொண்டு நிற்கின்றோம். உலகமே போற்றிப் புகழ்ந்து கொண்டிருக்கும் எங்கள் தலைவனின் காலத்தில் எங்கள் தாயகத்தை வென்றெடுப்போம். அன்று அன்பும் அறமும் கொண்ட எழுச்சிமிகு சமுதாயம் இங்கு உருவாகும் அதுவரை இந்த நெருப்பேந்திய யாகத்தில் நாங்கள் ஆகுதியாகுவோம். இந்து சமயங்களில் நாம் படிக்கின்ற இதிகாச, புராணங்கள் அதர்மம் அழிந்து தர்மம் வெல்லும் என்பதனை எமக்கு போதித்து நிற்கின்றன.

இவ்வாறு சைவ மன்றம் உயர் வகுப்பு மாணவ, மாணவிகளிடையே நடாத்திய சமய பொது அறிவுப் போட்டி பரிசளிப்பு விழாவிலே விடுதலைப் புலிகள் சார்பாகக் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக யாழ். மாவட்டப் பொறுப்பாளர் திரு. அன்பரசன் குறிப்பிட்டார். வடஇந்து மகளிர் கல்லூரியில் சைவ மன்றத் தலைவர் பேராசிரியர் வி. க. கணேசலிங்கம் தலைமையில் விழா நடைபெற்றது. தொடர்ந்து உரையாற்றியதிரு. அன்பரசன் குறிப்பிட்டதாவது:

ஒரு தேசிய இனம் என்ற வரையறைக்குள் கலைகளும் பண்பாடுகளும் முக்கிய இடத்தைப் பெற்றுக் கொள்கின்றன. கலைகளின் மேம்பாட்டிற்காகவும் பண்பாட்டுக் கருவூலங்களின் சின்னங்களாகவும் இந்து ஆலயங்கள் திகழ்கின்றன. பண்டைய தமிழ் அரசர்கள் ஆலயங்களின் கட்டட வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியிருக்கின்றனர். அரசர்களின் உதவியினாலும் ஒத்துழைப்புக்களினாலும் கட்டட சிற்ப ஓவியக் கலைகள் வளர்ச்சி பெற்றிருக்கின்றன. இது தவிர பண்ணிசைபாடும் பழக்கமும் இசையில் மக்கள் ஒன்றிப் போயிருக்கும் தன்மைகளையும் இந்து ஆலயங்களில் நாம் காண்கிறோம். சமய குரவர்கள் இறைவனை தோழனாகவும் நண்பனாகவும் உள்ளத்தைக் கடந்து நின்ற சக்தி என்ற வகையிலும் பண்ணிசைகளுக் கூடாகக் கண்டதனையும் நாங்கள் அறிந்திருக்கின்றோம். ஆலயங்களில் எங்கள் பாரம்பரியக் கலைகளான கும்மி, கோலாட்டம், கரகம் காவடி ஆகியனஇடம்பெற்றும் வந்திருக்கின்றன. இவ்வாறு நாங்கள் போற்றி வணங்குகின்ற வணக்கத்திற்குரிய தலங்கள் மீது இனவாத சிறிலங்கா அரச படைகள் குண்டு மழை பொழிந்து அழித்து வருகின்றன எனவும் தெரிவித்தார். (25)

# காசோலைகள் தொடர்பான நீதிமன்ற உத்தரவு நீக்கம்

(கொழும்பு)

அமைச்சரும், இ.தொ.கா. தலைவருமான எஸ். தொண்டமானின் பேரனான ஆறுமுகம் தொண்டமான் கைச்சாத்திடும் காசோலைகளை கௌரவிக்க வேண்டாம் என்று இலங்கை வங்கிக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் விலக்கிக் கொண்டுள்ளது.

வங்கியின் வாடிக்கையாளர் ஒருவரால் வங்கிக்கு கொடுக்கப்படும் ஆணையை மாற்றி விடுமாறு அந்த வங்கிக்கு உத்தரவிட நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லையாதலால் என்று சட்டத்தரணிகள் தெரிவித்த சட்ட வாதத்தை ஏற்றுக் கொண்டே நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவை விலக்கிக் கொண்டுள்ளது.

இ.தொ.கா. பொதுச் செயலாளர் எம். எஸ். செல்லச்சாமி, ஆறுமுகம் தொண்டமான் கைச்சாத்திடும் காசோலைகளைக் கௌரவிக்க வேண்டாமென்று வங்கிக்கு உத்தரவிடுமாறு நீதிமன்றத்தைக் கோரியிருந்ததும், அதைத்தொடர்ந்து இடைக்காலத் தடை உத்தரவு விதிக்கப்பட்டிருந்ததும் தெரிந்ததே.

# இராணுவத்தினர் எனக்கூறி வீட்டில் புகுந்து கொள்ளை

## வெள்ளவத்தைசம்பவம்

(கொழும்பு)

நாங்கள் இராணுவத்தினர் உங்கள் வீட்டில் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது. வீட்டைப் பரிசோதிக்க வேண்டும் என்று கூறி பட்டப் பகலில் வீட்டினுள் புகுந்து அங்கிருந்தவர்களைக் கட்டிப் போட்டுவிட்டு ஆறு இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் ஒரு கோஷ்டியினர்.

இச் சம்பவம் வெள்ளவத்தையில் நடைபெற்றது. நான்கு பேர் இந்த வீட்டினுள் புகுந்த வீட்டில் இருந்த பெண் இவரின் தந்தை மூன்று வேலைக்காரர் ஆகியோரைச் கொல்வதாகப் பயமுறுத்திக் கட்டிப் போட்டனர். கத்தியால் கொலை செய்வோம் என்று கத்தியைக் காட்டிப் பயமுறுத்தியுள்ளனர்.

வீட்டில் இருந்த அலுமாரிகள் அனைத்தையும் திறந்து ஆபரணங்களைத் தேடினர். சுமார் 4 மணியாகும் போது இருந்த ஆபரணங்களை சுருட்டிக்கொண்டு கொள்ளையர் தப்பிச்சென்றுள்ளனர்.

இது சம்பந்தமாக சிறிலங்கா பொலிசார் தீவிர விசாரணை நடத்திவருகின்றனர்.

# அரசாங்க வேலை வாய்ப்பு விண்ணப்பங்கள் கோரல்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சு மாவட்ட விளையாட்டு அதிகாரி பதவிகளுக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களுக்கு மொத்தம் எட்டு மாவட்ட விளையாட்டு அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளனர்.

இதற்கான விண்ணப்பங்கள் ஏப்ரல் மாதம் 8-ம் திகதிக்கு முன்னர் வடகிழக்கு மாகாண சபைக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

மேலும் இதற்கான மேலதிக விபரங்களையும் மாதிரி விண்ணப்பப் படிவங்களையும் மாவட்டச் செயலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

ஃ ஃ

வீடமைப்பு நிர்மாணத் துறை நகர அபிவிருத்தி அமைச்சின்கீழ் உள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் வடமாகாண அலுவலகத்திற்கு சில பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வீடமைப்பு உத்தியோகத்தர்கள், காசாளர்கள், சிறாப்பர்கள் ஆகிய பதவிகள் என்பனவற்றிற்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாதம் 24ஆம் திகதி ஆகும். (பா)

# இந்தியாவின் உள் விவகாரங்களில் சி.ஐ.ஏ. ஊழியர் சொத்து

யில் இறுதியில் நடைபெற்ற கிழக்கு மாகாண உள்ளூராட்சித் தேர்தல் வரை சகலவற்றிலும் தேர்தல் முறைகேடுகள் சாதாரணமாகி விட்டன. இறுதியாக கிழக்கு மாகாண உள்ளூராட்சித் தேர்தலில் பொலிசார் மேற்கொண்ட தேர்தல் முறைகேடுகள் பற்றி தேர்தல் ஆணையாளரே உறுதிப்படுத்தி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்நிலையில், எதிரணியினர் தேர்தலை ஒழுங்காக நடத்துமாறு பலதரப்பிடம், அதாவது தேர்தலை நடத்தும் அதிகாரிகளிடமும், அதற்குப் பாதுகாப்பு வழங்கும் பொலிஸ் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுவது தவிர்க்க முடியாத தொன்றே. ஆனால் அது எத்துணை சாத்தியமாக முடியும் என்பதே கேள்வியாகும்.

ஏனெனில், ஆளும் ஐ. தே. கட்சி தேர்தல் மோசடிகளில் கைதேர்ந்ததொன்றாகிவிட்டது. எதிரணியினால் கண்டுபிடிக்கப்பட முடியாத அளவிற்குக் கூட தேர்தல் மோசடிகளில் அவர்களால் ஈடுபட முடியும். அத்தோடு, அதிகாரச் சுவையைக் கண்டுவிட்ட ஐ. தே. கட்சியினர், தேர்தல் வெற்றிக்காக எவ்வழிவகைகளையும் கையாளத் தயங்கப் போவதில்லை. கடந்த காலத்திலும் இதையே அவர்கள் செய்து வந்துள்ளனர்.

அத்தோடு சிறிலங்காவின் அரச உயர் அதிகாரிகளும் சரி, பொலிஸ் மற்றும் ஆயுதப்படையினரும் சரி ஐ. தே. க. மயப்படுத்தப்பட்டு விட்டனர் என்றே கூறலாம். அதாவது இவர்களில் அனேகர் ஐ. தே. கட்சியைச் சார்ந்தவர்கள்; அல்லது ஐ. தே. கவினால் இலாபம் அடைந்து வருபவர்கள். இதற்கு சுமார் 16 வருடங்களுக்கு மேலாக ஐ. தே. கட்சி ஆட்சியில் இருப்பதே காரணமாகும். இந்நிலையில் தேர்தலில் பக்கம் சாராமல் அரச அதிகாரிகளும் ஆயுதப் படையினரும் மற்றும் பொலிசாரும் கடமையில் ஈடுபடுவார்கள் என எவ்வாறு எதிர் பார்க்க முடியும்.

அதாவது அரச அதிகாரிகளும் ஆயுதப் படையினரும் ஐ. தே. கவை ஆதரிப்பதும் அவர்களுக்குச் சார்பாக நடப்பதும் நியாயமென்ற நிலையே ஆகிவிட்டது. இந்நிலையில் ஜனநாயக ரீதியிலான தேர்தல் எத்துணை சாத்தியமாக முடியும். காவலனே கள்வனாகும் போது களவு நடைபெறாமல் தடுப்பதும், குற்றவாளியே நீதிபதியாக இருக்கும் போது நீதியை எதிர்பார்ப்பதும் எத்துணை பொருத்தமானது. ஆனால், இவ் ஜனநாயகச் சீரழிவிற்கு தனியாக ஐ. தே. கட்சியினதும் அதன் அரசாங்க அதிகாரிகளினதும் நடவடிக்கைகள் தான் முழுமையான காரணம் என்று கூறிவிட முடியாது. கடந்த காலத்தில், எதிர்க்கட்சிகள் தமிழரை மாற்றான் தாய் மனப்பான்மையுடன் நோக்கியமையும், ஒரு ஜனநாயக ரீதியான அரசியற்கட்சிக்குரிய கடப்பாடுகளை நிறைவேற்றாமையும் இன்றைய இவ் அவல நிலைக்குக் காரணம் என்று துணிந்து கூறலாம்.

# இந்தியாவின் உள் விவகாரங்களில் பாக். தலையீட்டை சகிக்கமுடியாது

## • வாஜ்பாய் தெரிவிப்பு

(டில்லி)

இந்தியாவின் உள் விவகாரங்களில் பாகிஸ்தான் தலையிடுவதை இனிமேலும் பொறுத்துக்கொள்ள முடியாது என்பதை இந்தியா உலகிற்கு உணர்த்த வேண்டிய தருணம் வந்துவிட்டது. இவ்வாறு பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர்களில் ஒருவரும், எதிர்க்கட்சித் தலைவருமாகிய ஏ. பி. வாஜ்பாய் கூறியுள்ளார்.

ஐதராபாத்தில் மக்கள் அரங்கு ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் ஆணைக்குழு மாநாட்டில் உண்மை வென்றுவிட்டது என்று கூறி அகமகிழ்ந்து கொண்டிருக்க முடியாது. பாகிஸ்தான் மனித உரிமைகளை மேம்படுத்துவதிலும், பேணுவதிலும் அக்கறை காட்டவில்லை. தனது எல்லைகளை விரிவாக்கும் எண்ணம்தான் அதற்கு உள்ளது. இதனை ஆணைக் குழுவின் இப்பத்தட்ட எல்லா உறுப்பு நாடுகளும் உணர்ந்துள்ளதில் இந்தியா வெற்றி கண்டிருக்கிறது என்றும் தெரிவித்தார்.

# பாக். உளவு ஊடுருவல் உ.பியில் அதிகரித்துவருகிறது

## • முன்னாள் முதல்வர் கல்யாண்சிங்

பாகிஸ்தான் அரசின் முப்படை உளவு ஸ்தாபனமான ஐ. எஸ். ஐ, உத்தரப்பிரதேச மாநிலத்தில் தனது நடவடிக்கைகளை விரிவுபடுத்தியிருப்பதாக உத்தரப்பிரதேச முன்னாள் முதல்வர் கல்யாண்சிங் தெரிவித்துள்ளார். லக்னோவில் செய்தியாளர் மத்தியில் பேசிய அவர் மேலும் குறிப்பிடுகையில், பகுஜன் சமாஜ்-சமாஜவாதி ஜனதாக் கட்சிக் கூட்டணி மாநிலத்தில் ஆட்சிக்கு வந்த பின்னர் ஜாதி வெறி அதிகமாகி இருப்பதாகவும் தெரிவித்தார்.

# 80 பெண்களுக்கு அசிட் வீச்சு பீகிங்கில் ஒருவர் கைது

(பீகிங்)

80 பெண்கள் மீது சல்பூரிக்கமிலத் திராவகம் வீசித் தாக்குதல் நடத்திய வூ-ஸி-சொங் என்னும் இருபத்திரண்டு வயது இளைஞர் ஒருவர் சீனப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவரது இத்தாக்குதலுக்கு சுமார் எண்பது பெண்கள் வரையில் இலக்காகி இருப்பது குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழகத்தில் அனுமதி அளிக்க மறுத்த பெண் ஆசிரியை ஒருவரைப் பழிவாங்கும் நோக்கில் அவரது மகளுக்கு அமிலத் திராவகம் வீசத் தான் முடிவு செய்ததாகவும், எனினும் அவரது மகள் யாரென்பது தெரியாததால் எல்லாப் பெண்களுக்கும் அமிலத்திராவகம் வீசியதாகவும் பொலிசாருக்கு அளித்த வாக்குமூலத்தில் வூ ஸிசொக் கூறியுள்ளார்.

சீனாவில் அமிலம் வீசித் தாக்குவது அதிகரித்து வருவதாகவும், இதில் பெண்களே அதிகம் பாதிக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

# எதியோப்பியாவில் பட்டினி மரணம்

(அடிஸ் அபாபா)

எதியோப்பியாவில் நிலவும் கடுமையான உணவுப்பற்றாக்குறையினால் நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது. கடந்த மாதத்தில் 74 பேரும் இம்மாதத்தில் 88 பேரும் இவ்வாறு மரணமடைந்திருப்பதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

# விவசாயிகள் ஒய்வூதியம்

விவசாய ஓய்வூதிய திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் பெறும் யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகளுக்கான பங்குனிமாதக் கொடுப்பனவு நாளை மறுதினம் காலை பத்து மணியளவில் கமத்தொழில் காப்புறுதிச் சபையின் மாவட்டக் காரியாலயத்தில் வழங்கப் படவுள்ளது.

# சி.ஐ.ஏ. ஊழியர் சொத்து விபரம் கோரப்படுகிறது

(வாஷிங்டன்)

அமெரிக்க மத்திய உளவு ஸ்தாபனமான சி. ஐ. ஏயின் ஊழியர்கள் 22,000 பேரும் ஆண்டு தோறும் தங்கள் சொத்து விபரங்களை வெளியிட வேண்டும் என்று டைரக்டர் ஜேம்ஸ் உல்ஸி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

ஊழியர்களின் பணம் எங்கிருந்து கிடைக்கிறது, அவர்கள் எவ்வாறு உபயோகப்படுத்துகிறார்கள் என்பதை திட்டமிட்ட முறையில் அறியும் முயற்சியாக இது இருக்கும் எனவும் திரு. உல்ஸி தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவுக்கு உளவு கூறிய அமெஸ் மீதான விசாரணையை சி. ஐ. ஏ. இன்ஸ்பெக்டர் ஜெனரல் பிரட்கிட்ஸ் முடிக்கும் வரையில் சி ஐ ஏ அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதை தாமதிக்கப் போவதாகவும், சில அதிகாரிகளின் பதவி உயர்வை நிறுத்தி வைக்கப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

## பி. எல். ஓ ஏமாற்றம்

(டுனிஸ்)

ஜனாதிபதி கிளின்டனுக்கும் இஸ்ரேலியப் பிரதமர் ராபினுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுகள் குறித்து சிரேஷ்ட பி. எல். ஓ அதிகாரி ஒருவர் ஏமாற்றம் தெரிவித்ததுடன் மத்திய கிழக்கு சமாதானப்பேச்சுகள் முட்டுக்கட்டையிலிருப்பதாகவும் கூறியுள்ளார்.

# அபாயகரமான நாடாக மாறிவரும் அமெரிக்கா

கொலைக் குற்றச்செயல்கள் அதிகரித்து வருவதனால் வாழ்வதற்கு அபாயகரமான ஓர் இடமாக அமெரிக்கா மாறிவருகிறது என்று அமெரிக்க இளைஞர்கள் ஜனாதிபதி பில் கிளின்டனுக்கு தெரிவித்துள்ளனர்.

இதனை ஏற்றுக்கொண்ட அமெரிக்க ஜனாதிபதி பாதுகாப்பான வாழ்க்கையை அவர்கள் நடத்த முடியும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார். வெள்ளை மாளிகையில் 50க்கும் அதிகமான இளைஞர்களை ஜனாதிபதி சந்தித்தார். இளைஞர்களுக்கு வேலைத்தையும் நம்பிக்கையையும் ஏற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை ஜனாதிபதி எடுக்க வேண்டும் எனச் சிறுவர்கள் கேட்டுக் கொண்டனர். இதற்கு இணங்க ஜனாதிபதி அவர்களுக்கு பதிலளிக்கையில் சமூகங்களிலும் பாடசாலைகளிலும் நிலவும் வேலையில்லாப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதன் மூலம் இதனை நிறைவேற்றி வைப்பதாகக் கூறினார்.

## யோர்க்கைதிகள் விடுதலை

கடந்த ஓராண்டு காலப் பூசல்களில் முதன்முறையாக முஸ்லிம்களும் குரோசியர்களும் உட்பட நூற்றுக் கணக்கான போர்க்கைதிகள் அண்மையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

**வளமான நாட்டில் வாழ்வினில் சிறக்க**
**வதிவிட வேளாண்மை செய்தலே உகந்தது!**

# வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பு சட்டவிரோதமானது

## -முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைப்பது சம்பந்தமாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டிய அவசியம் இல்லை; இவ்விரு மாகாணங்களும் தனித்தனியே நிர்வகிக்கப்படும் என்பதை பாராளுமன்றத்தில் எழுத்து மூலம் அறிவித்தாலே போதுமானது இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா கூறியுள்ளார்;

இணைப்பு குறித்த சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பாக கருத்து வெளியிட்ட ஜெயவர்த்தனா, வடக்கையும் கிழக்கையும் இணைப்பதா இல்லையா என்பதற்காக அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்றை இன்றைய ஜனாதிபதி நடத்த உத்தேசித்துள்ளார். இதன் மூலம் இவர் சிறிலங்காவின் அரசியல் சட்டத்தை மீறுகிறார்;

அரசியல் சட்டம் 154 ஏ இரண்டுக்கும் மேற்பட்ட மாகாணங்களை இணைக்கவகை செய்கிறது. இது தொடர்பான சட்டப்பிரிவு 37 (1) ஆகும். இச்சட்டவிதியை அமுல்படுத்துவதாயின் போராளிகள் வசமுள்ள வெடி மருந்துகள் யுத்த ஆயுதங்கள் அனைத்தையும் 29-7-87க்கு முன்னர் அரசிடம் ஒப்படைக்க வேண்டும். போராளிகள் சட்டப்படி ஆயுதங்களை ஒப்படைக்கத் தவறியமையினால் வடக்கு-கிழக்கு இணைப்பை சட்டம் அங்கீகரிக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்;

# இந்திய - இலங்கை உடன்பாடு ஜே.ஆருடன் இணைந்து ஆதரித்தேன்

## - டி. பி. விஜேதுங்கா

(கொழும்பு)

இலங்கை - இந்திய ஒப்பந்தம் தொடர்பாக நடவடிக்கைகளை மேற் கொள்ளும் போது நானும், றொனிடி மெல், காமினிதிசாநாயக்காவுமே அப்போதைய ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனாவுக்கு உறுதுணையாகச் செயற்பட்டோம் என தற்போதைய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவித்துள்ளார்.

மத்தறையில் நடைபெற்ற தென் மாகாண சபை பிரசார கூட்டமொன்றில் பேசும்போதே மேற்படி கருத்தை அவர் தெரிவித்தார்;

தொடர்ந்து பேசிய அவர் கொப்பேகடுவ உட்பட முப்படை தளபதிகளும் வட பகுதி இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப் பட வேண்டுமாயின் இருபது ஆயிரம் உயிர்களை இழக்க வேண்டும் என அப்போது தெரிவித்தனர்; அந்த இழப்புக்கு மத்தியில் யுத்தம் தொடர்ந்து மேற் கொள்ள முடியாத நிலை தோன்றும் என அவர்கள் அறிவித்தல் தந்தார்கள் யுத்தம் செய்பவர்களே யுத்தம் செய்வது கஷ்டமான நிலையென தெரிவித்த போது நாம் என்ன செய்வது இந்த நிலையில் தான் ஒப்பந்தம் செய்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது;

எமது நிலையை நன்கு புரிந்த இந்திய பிரதமர் பயங்கர வாதத்தை ஒழிக்க ஒத்துழைப்பு தருவதாக எம்மிடம் கூறும் போது புத்திமிகு தலைவர்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கை பென்ன? புத்தி மிகு தலைவர் எடுத்த நடவடிக்கை தொடர்ந்து நிலைத்து இருக்குமாயின் ரஞ்சன் விஜேரட்ன, கொப்பேகடுவ, லலித் அத்துலத் முதலி, விமல விஜயரட்ன, பிரேமதாச போன்றோர் இன்றும் உங்கள் மத்தியில் உயிருடன் இருந்திருப்பார்கள் என தெரிவித்துள்ளார்;

கல்வி வெளியீட்டு திணைக்களம்

# உதவி ஆணையாளர்கள் பதவி வெற்றிடங்கள்

கல்வி வெளியீட்டுத்திணைக்களத்தில் கணிதவியல், பௌதிகவியல், தாவரவியல், விலங்கியல், விவசாயம், வர்த்தகம், ஆங்கிலம், வரலாறு, சமூகக்கல்வி, இந்து சமயம், கிறிஸ்தவசமயம், பொருளியல், தமிழ்மொழி பாடங்களுக்கான உதவி ஆணையாளர்கள் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் போட்டிப் பரீட்சை மூலம் தெரிவாவர். இப் பதவிகள் இலங்கை கல்வி நிருவாக சேவையின் 3 ஆம் வகுப்பிற்குரியவை. இவ் வகுப்பைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் இப் பதவிக்கு விண்ணப்பிக்கமுடியும். பட்டதாரிகள், கல்வியில் பட்டப் பின்படிப்புடிப்ளோமாபெற்றவர்கள், கல்வியில் பட்டம் பெற்றவர் ஆகியோரும் விண்ணப்பிக்க தகுதியுடையவர்களாவர். விண்ணப்ப முடிவு திகதி இம் மாதம் 25ஆம் திகதியாகும்.

# சிப்பாயின் மரணச்சடங்கில் பிக்கு விபத்து மரணம்

வடபகுதி இராணுவ முகாமில் கடமையாற்றிய வேளை உயிரிழந்த இராணுவச்சிப்பாயின் மரணச் சடங்கில் கலந்து கொண்ட பிக்கு ஒருவர் விபத்தில் சிக்கிப் பலியானார்;

இந்தஇராணுவச்சிப்பாயின் மரண ஊர்வலத்தில் சென்ற லொறியொன்று பள்ளத்தில் பாய்ந்ததால் இப் பிக்கு பலியானார். 14 பேர் காயமடைந்தனர்; காயமடைந்தவர்களில் இருவர் பிக்குகள். இச்சம்பவம் காலிஅக்குரஸ்ஸ வீதியில் தொறப்பே என்ற இடத்தில் நிகழ்ந்தது.

# தேங்கியுள்ள பதிவுத் தபால்களை உடன் அனுப்ப ஆவன செய்க

## பிரதி தபால் அத்தியட்சகர் கோரிக்கை

(கொழும்பு)

சென்ற வருடம் நவம்பர், டிசம்பர் மாதங்களில் கொழும்பில் தபாலில் சேர்க்கப்பட்ட கடிதங்கள் குறிப்பாக பதிவுத் தபால்கள் இன்னும் கிடைக்கப்பெறவில்லை என்று யாழ். குடாநாட்டிலுள்ள காப்புறுதிக் கூட்டுத்தாபனம், விலை மதிப்புத் திணைக்களம், ஓய்வூதியம் பெறுவோர், கூட்டுத்தாபன இளைப்பாறிய ஊழியர்கள் மற்றும் வங்கிகளைச் சேர்ந்த இளைப்பாறிய ஊழியர்கள் புகார் தெரிவித்துள் தபால் கிடைப்பதில் அடிக்கடி ஏற்படும் கணக்கத்தினால் யாழ். குடாநாட்டு மக்கள் அதிகம் பாதிப்படைந்துள்ளார்கள். ஆகவே கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரும் ஒவ்வொரு கப்பலும் தபால் பொதிகளைக் கொண்டுவரும் என்று நீங்கள் உறுதியளித்தால் நான் நன்றியுள்ளவனாக இருப்பேன். பருத்தித் துறைக்கு 18ஆம் திகதி வந்த எம். வி, கோமாரி கூட கடிதம் எடுத்து வரவில்லை என்றும் -- ந்து யாழ்ப்பாணம் வரும் தபால்கள் எல்லாம் அநேகமாக கிழிக்கப்பட்ட நிலையிலேயே வருகின்றன. இது தொடர்பாக நான் எழுத்து மற்றும் கடிதமூலமாக உங்களுக்குத் தெரிவித்துள்ளேன், பொதுமக்களைத் திருப்திப் படுத்த முடியாத மிகவும் கஷ்டமான நிலையில் தான் இருக்கிறேன். இது விடயம் குறித்துத் தகுந்த நடவடிக்கை எடுத்தால் நான் நன்றியுடையவனாக இருப்பேன் என்றும் தெரிவிக்கப்பட்டுள்


யாழ் ஸ்ரீதர் திரையில்

இன்று முதல்

புரூஸ்லி நடித்த

**Enter The Dragon**

தினசரி 4-00 மணி, 6-00 மணி சனி,
ஞாயிறு 10-30 மணி, 4 00 மணி, 6-00 மணி

குறிப்பு:- ஜனவரி - 94 ஒளிவீச்சு சனி, ஞாயிறு தினங்களில் பி. ப. 2-30 மணியளவில் மட்டும் காண்பிக்கப்படும்.

(கி-8880)


# உலகில் அதிசிறந்த தேசியவாதி நானே.

## -டி. பி. விஜேதுங்கா

(கொழும்பு)


உலகிலுள்ள அதிசிறந்த தேசியவாதி நானே என்று சிறிலங்கா ஜனாதிபதி டி. பி, விஜேதுங்கா கூறினார்.

கம்புறுப்பிட்டிய பகுதியில் நடைபெற்ற கட்சிக் கூட்டமொன்றில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில் ஐயாயிரத்திற்கு மேற்பட்ட தேயிலை, ரப்பர் தோட்டங்களை நன்கொடையாக வழங்கியுள்ளேன். பல அரும்பெரும் தியாகங்களை செய்துள்ளேன். பலம்வாய்ந்த அரசு ஒன்றின் மூலம் மட்டுமே வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும் எனவும் தெரிவித்தார்.

# தட்டுவன்கொட்டியில் வீரச்சாவு



கப்டன் அன்பன்



லெப். கம்பன்



# பீரங்கி தாக்குதல்

வல்வெட்டித்துறை கடற்பரப்பில் ரோந்து சென்ற சிறிலங்கா கடற்படையினர் குடியிருப்புகள் மீது பீரங்கித்தாக்குதலை மேற்கொண்டனர்.

இப்பகுதியில் ரோந்து சென்ற படையினர் நேற்று முன்தினம் இரவு 8. 30 மணியவில் இடைவிடாதுதொடர்ச்சியாகத் தாக்கினர் மயிலியதனைப் பகுதியையே இலக்கு வைத்து தாக்கினர்;

அதேசமயம் பொம்மர் விமானங்கள் உலங்கு வானூர்தி பல பலாலிக்கு வந்து திரும்பிச் சென்றன காலை 6. 45 மணிக்கு வந்து இறங்கிய விமானங்கள் அடிக்கடி அங்கிருந்து ஆனையிறவு பக்கமாக பறந்த வண்ணமிருந்தது. (யோ)

செயலகத்தில் துறை துறைமுகத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கப்பல்மூலம் பொருள்களை எடுத்துவரும் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களும், தனியார் வர்த்தகர்களும் இன்று காலை 10-00 மணியளவில் யாழ். செயலக திட்டப்பணிப்பாளரின் அலுவலகத்தில் நடைபெறஇருக்கும் கலந்துரையாடலுக்கு சமுகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

சுகாதார சம்பவம் இடம்பெற்றுள்ளது. சத்திர சிகிச்சைக்கு உட்பட்ட பின்னர் ஆபத்தான கட்டத்தை தாண்டியிருப்பதாக வைத்திய வட்டாரங்கள் கூறியுள்ளன. மற்றும் மூவர் இச் சம்பவத்தில் காயமடைந்துள்ளனர். இச் சம்பவம் தொடர்பாக கண்டிமாவட்ட சு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டி. எம். ஜயரத்னா, அம்பாந்தோட்டை மாவட்ட மக்கள் முன்னணி வேட்பாளர் டல்ஸ்தன் எதிரிசூரிய ஆகியோர் பொலிசா

தினங்களில் பி. ப. 2-30 மணியளவில்
(இ-8880) மட்டும் காண்பிக்கப்படும்.

## தேவை

ஒலி அமைப்பிற்கான ஒலிபெருக்கி உபகரணங்கள் தேவை: விற்க விரும்புவோர் 1994-03-31 க்கு முன் விபரங்களுடன் கைத்தொழில் வர்த்தகர் சங்கம், சாவகச்சேரியுடன் தொடர்பு கொள்ளவும்.

(இ-8882) செயலாளர்

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 21-03-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 1362

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:-

43-3156, 41-9663, 26-0512, 42-2397, 42-3815, 24-9638, 26-5370, 43-6007, 26-7286, 40-9188, 27-2143, 27-9779, 40-2834, 28-7662, 26-4792, 24-9549, 24-4282, 28-0425, 43-4170, 43-8265, 40-1576, 28-9557, 27-8515, 28-2810.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

42-8316, 27-8155, 27-0994, 28-9186, 24-6431, 40-7583, 27-9764, 27-2004, 24-5437, 24-4476, 24-3714, 24-8700, 26-3146, 28-4147, 26-4648, 24-5509, 24-8367, 26-9201, 24-0922, 24-0917, 26-8339, 27-5099, 27-9756, 41-4194, 26-4376.

## அறிவித்தல்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத் திருவிழாக் காலத்திற்கான கடைகள் வழங்குதல் இன்று 22-3-1994 செவ்வாய் காலை 10.00 மணிக்கு ஆலய வெளிவீதியில் நடைபெறும்.

(7787) நிர்வாகம்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81ஆம் இலக்கத்தில் உள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

சேர்ந்த இணைப்பாறிய ஊழியர்கள் புகார் தெரிவித்துள்ளார்கள் என்று பிரதித்தபால் மா அத்தியட்சகர் (வடக்கு) தபால் மா அத்தியட்சகருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில்,

யாழ்ப்பாணத் தபால்கள் குறிப்பாகப் பதிவுத் தபால்கள் 1993 நவம்பர், டிசம்பர் மாதங்களில் கட்டில் சேர்க்கப்பட்டும் அந்தக்கடிதங்கள் கொழும்பு மத்திய தபால்சேகரிப்பு நிலையத்தில் தேங்கிக்கிடக்கின்றன. முந்திய தபால்கள் தவிர பிந்திய மாதங்களில் கட்டில் சேர்க்கப்பட்ட கடிதங்கள் தான் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று எண்ணத் தோன்றுகின்றது என்றும்--

### அரசாங்க

யாழ் அரசாங்க அதிபருக்கு உத்தியோகபூர்வமாகக்கிடைப்பதில்லை இதனால் நிர்வாக ரீதியில் சில சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக தெளிவான செய்தி பெறவேண்டிய தேவை அரச அதிபருக்கு ஏற்பட்டுள்ளது.

அரச அதிபர் யாழ் குடாநாட்டிற்கான அத்தியாவசிய உணவுப் பொருள்களின் சீரான விநியோகத்தின் தேவை பற்றியும் கொழும்பில் பேசுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாங்கத்தின் கடல்வலய தடைச்சட்டம் நீக்கம் சம்பந்தமான செய்தி அரச அதிபருக்கு அறிவிக்கப்பட்ட பின்னர் அது சம்பந்தமான வேறு செய்திகள் அரச அதிபருக்கு உத்தியோக பூர்வமாக அனுப்பி வைக்கப்படவில்லை.

மேற்படி செய்தியின் பின்னர் மீன்பிடிக்கச் சென்ற பலர் இராணுவத்தின், கடற்படையின் தாக்குதலுக்கு பாதிப்படைந்துள்ளனர்.

இவ்வாறான மேலும் சில சிக்கல்களை தீர்த்துக் கொள்ளும் நோக்குடனேயே யாழ் அரசாங்க அதிபர் கொழும்பு பயணமாகின்றார். (தி.பா)

கடிதம் எழுதுவதில்லை என்றும் --

மற்றும்படி கொழும்பிலிருந்து யுடையவனாக இருப்பேன் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கட்டுத்துவக்கு வெடித்து இருவர் படுகாயம்

புளியங்குளம் பழையவாடி பகுதியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இருவர் கட்டுத்துவக்கு வெடித்ததில் படுகாயமடைந்தனர்.

வரம்பின்மீது கட்டுத்துவக்குடன் சென்று கொண்டிருந்த ஒருவர் இடறிவிழுந்ததில் அவர் வைத்திருந்த கட்டுத்துப்பாக்கி வெடித்தது. அப்போது அவருக்கு முன்னால் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இருவர் மீதும் சன்னங்கள் பாய்ந்ததில் அவர்கள் இருவரும்படுகாயமடைந்தனர்.

இச் சம்பவம் கடந்த 17ஆம் திகதி நடந்தது. பழையவாடி புளியங்குளத்தை சேர்ந்தவர்களான மயில்வாகனம் செல்வராசா (வயது 35) செல்லத்துரை நாகராசா (வயது 27) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவார். (சி.(ச

## டி. பியின் பேச்சுக்களை மக்கள் ரசிக்கவில்லை

தென்பகுதியில் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ள ஜனாதிபதி விஜேதுங்க வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் பிரிவினைவாதிகளுக்கு எதிரான கடும்போக்கை வலியுறுத்திப் பேசிவருகிறார். ஆனால் பொருளாதாரம், கல்வி ஆகியவை குறித்து அரசின் நிலை என்ன என்பதை அறிய விரும்பும் மக்கள் அவருடைய இந்தப் பேச்சுகளை அவ்வளவாக வரவேற்கவில்லை என பி.பி.ஸி. குறிப்பிட்டது.

எதிர்க்கட்சி கூட்டணியின் பேரணிகளில் மக்கள் கூட்டம் அதிகமாக உள்ளது. ஐ. தே. கவின் வெற்றிவாய்ப்பு குறைவு என்பதை இது காட்டுகின்றது. எனவும் பி.பி.ஸி. மேலும் தெரிவித்தது.

இம்மாகாணசபை ஆட்சியை ஐ.தே.க. இழந்தால் அது பெருத்த அடியாக இருந்துவிடும், இது பொதுத் தேர்தலை நடத்தும் திகதியை ஆளும்கட்சி மறுபரிசிலனை செய்ய வழிவகுக்கும். சுதந்திரக்கட்சிக்கு தோல்வி ஏற்பட்டால் அது எதிர்க்கட்சி தான் என்ற முத்திரை உறுதியாகிவிடும் அதன் அரசியல் எதிர்காலம் மேலும் சரிந்துவிடும்.

### கட்சிப்

நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் இதற்குரிய வாகன அனுமதிப்பத்திரங்கள் தற்போது வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தென் மாகாண சபைத் தேர்தலின் போது வன்முறைகள் இடம் பெற்றால் அதை முறியடிக்கவும் மற்றும் தேர்தல் ஒழுங்கீனங்களை முறியடிக்கவும் தேர்தல் ஆணையாளரின் சகல உத்தரவுகளும் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### போலி

மூலம் மக்களை குழப்பமடையச் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. எனவும் சிறிமாவோ பண்டாரநாயக்கா குற்றஞ்சாட்டினார்.



லெப். ஜெயக்குமார்

### தட்டுவன்கொட்டி

இராணுவ முகாமின் காவல் நிலைகள் மீது விடுதலைப்புலிகள் நடத்திய ரொக்கட் தாக்குதலில் மூன்று படையினர் பலியானதாகவும் நான்குபேர் காயமடைந்ததாகவும் கொழும்பில் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

சூரிய ஆகியோர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

### பீரங்கி

திரும்பவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

றெக்கிளமேஷன் மத்திய கிழக்கு வீதியைச் சேர்ந்த சிலுவை ஜிப்றோன் (வயது 23) என்பவரே திரும்பிவராதவராவார்.

இவருடன் கூடச் சென்றிருந்த இருவரும் வள்ளமும் கரை வந்துவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## 31-ம் நாள் நினைவஞ்சலி!



### அமரர் திரு. ஆறுமுகம் கந்தையா

(முன்னாள் அச்சுவேலி பஸ் நிலையப் பொறுப்பாளர்)

வலைவன் தோட்டம் கரணவாய் தெற்கைச் சேர்ந்த அமரர் ஆறுமுகம் கந்தையா (முன்னாள் அச்சுவேலி பஸ்நிலையப் பொறுப்பாளர்) அவர்களின் 31ஆம் நினைவு நாளான நாளை (23-03-1994) காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் பகல் போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு இ. போ. ச. பருத்தித்துறை ஊழியர்களையும், அன்னாரின் உறவினர்கள், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,

அன்னாரின் குடும்பத்தினர்

(7819)